உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உஉ.] ரக்தாக்ஷிவூ ஆடிமீ [பகுதி கூ.

Vol. XXII. July-August-1924. No. 9.

மதங்க சூளாமணி.

[முகவுரை]

"அந்தணர் வேள்வியொ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியொ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கியற் பொருளுரை நிரம்பிவினை முடிக
வாழ்க நெடுமுடி கூர்கம் வாய்மொழி
என யாம்,
மங்கல நல்லுரை வழிமுறை யியம்புதும்
திங்களங் குழவி சேர்த்திய திருமுடி
ஐங்கரன் சித்தி விநாயகன்
செங்கதிர் புரைகழற் சேவடி தொழுதே."

மதங்கர் - கூத்தர்; அன்னாருக்கு ஒரு சிரோரத்தினம்போன்றுரை மதங்கசூளாமணியெனல் பொருத்தமாகும். உலகனைத்தும் ஒரு நாடக மேடையாமெனவும், ஆடவரும் பெண்டிரும் அந் நாடகமேடையினுட் புகுந்து நடிக்கின்ற கூத்தருங்கூத்தியருமாவரெனவுங்கூறிய ஓர் ஆங்கிலக் கவிவாணர் உளர். சிறந்த நாடகக்கவியாகிய இப்பெருந்தகையார் உலக வாழ்க்கையனைத்தையுமே ஒரு நாடகமாகக் கற்பித்து அதனை மதலைப் பருவம், பாலப்பருவம், யௌவனப்பருவம், வீரப்பருவம், நீதிப்பருவம், வயோதிகப்பருவம், இறுதிப்பருவம் என ஏழங்கமாக்கிக்கூறியது சால வுஞ்சிறப்புடைத்து. அக்கூற்று வருமாறு:—

"அங்கணுல கனைத்தினையும் ஆடரங்க மெனலாகு மவனி வாழும்
மங்கையரை யாடவரை நடம்புரியு மக்களென மதித்தல் வேண்டும்
இங்கிவர்தாம் பலகோல மெய்திநின்ற நாடகத்தி னியல்பு கூறிற்
பொங்குமங்க மேழாகிப் போக்குவர விருக்கையொடு பொருந்து மன்றே.

முதலங்கத் தியல்புரைப்பின் முலையருந்தி மணியிதழ்வாய் முகிழ்திறந்து
குதலைச்சின் மொழிமொழிந்து செவிலித்தாய் காதலத்திற் கூத்து மாடித்
திதலைபபொன் செறிதனத்தார் சேர்த்தணைக்கச் சிறுநகையிற் சிறப்புக் காட்டும்
முதலைசசெம் பருவத்தின் வனப்பனைத்தும் விளங்குகின்ற மார்க்க மாகும்.

மணிமருள்வா யிளஞ்செவ்வி மதலையென நடித்தமகன் வதன நோக்கம்
அணிநிறையு மோரைந்தாண் டடைதலுமே கணக்காய ரகத்தை நோக்கி
இணைபிரிந்த விளஞ்சிந்தை பின்னீர்க்க முன்னேகி யிளஞா யிற்றின்
குணநிறைந்த சிறுபொழுதிற் குறுகிநடந் துறுகின்ற குறிப்பி ரண்டே.

எல்லைவந்த மூன்றாகு மங்கத்தின் குறிப்புரைப்பி னேருஞ் சீரும்
புல்லநின்ற யௌவனமாம் பருவமுற வேனில்வேள் பொருபோர் வேட்டு
மெல்லிநல்லார் தமைநாடி யன்னவர்தங் கட்புருவம் வியந்து பாடிச்
சொல்லரிய காமவன லுளம்வெதுப்ப நெடிதுயிர்க்குந் தோற்ற மாகும்.

அடலரியே றெனவார்த்துப் புலிமுகத்த னிவனென்ன வடுபோர் வேட்டுப்
படுகளத்தி லதிரிடிபோற் படிந்துறுமும் பீரங்கிப் படைமுன் னுக
மிடல்சிறப்பப் பொருதெனினும் புகழ்பெறுவன் யானென்ன வீர மேவல்
தொடர்புடைய நான்காகு மங்கத்தின் குறிப்பென்னச் சொல்ல லாமே.

வட்டவுரு வெய்துதரம் வடிவினிற்சற் றகன்றுநிற்ப மனத்தி னீர்மை
திட்டமுற நயனத்திற் சினக்குறிப்பு மருட்குறிப்புஞ் சேர்ந்து நிற்பச்
சட்டமுறை யறிந்தெவர்க்குஞ் சமநிலையாய் நீதிசொலும் சார்பின் மேவி
இட்டமுறும் பெருமகன்ற னியனிலையை யைந்தென்ன வியம்ப லாமே.

முதுமையுற வுடல்தளர்ந்து முகஞ்சுருங்கி யுருக்குலைந்து மூப்பின் றேற்றம்
இதுவெனக்கண் டௌமெலிய விணைவிழியிற் படிகக்கண் ணியைந்து நிற்பக்
கதுமெனவே யிருமல்வரக் காறளர்ந்து தள்ளாடிக் கருத்து மாறிக்
குதலைமொழிச் சிறுவருரை குலவுகின்ற கிழப்பருவங் கூறி னாரே.

பண்ணியையு மென்மொழிசேர் பாலரொக்கும் கிழப்பருவம் பயின்ற பின்னர்க்
கண்ணிணைகள் நோக்கொழியப் பல்லொழியச் சுவையொழியக் கருத்து நீங்க
உண்ணுமுணவொழித்தனைத்துமொழிந்துமறைந்துயிர்வாழ்க்கை யொருவுந் தோ
எண்ணுமிந்த நாடகத்தி னிறுதியென யாமெடுத்தின் கியம்பு வாமே." [ற்றம்

இவ்வாறு உலகவாழ்க்கையை நாடகமாகக் கற்பித்துக்கூறிய இக் கவிவாணர் வனப்பின்மிக்க நாடகநூல்கள்பலவற்றை உலகுக்கு அளித்துள்ளார். அஃதன்றி, அரங்கினுட்புகுந்து தாமும் கூத்தருள் ஒருவராக நின்று நடித்துள்ளார். நாடகக்கவிகளுள் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறரிலர். ஆதலால் ஷேக்ஸ்பியர் என்னும் இயற்பெயர் பூண்ட இக் கவிவாணரை யாம் மதங்கசூளாமணி யென வழங்குவாம். இவரது நாடகங்களுள் அமைந்துகிடந்த வனப்பினுட் சி ல வ ற் றை

யாராயப்புகுந்த விவ்வுரைத்தொடரும் மதங்கசூளாமணியென வழங்கப் பெறும்.

கவிவாணர் இயற்பெயரைத் தமிழ்மொழியாக்கிச் சேகசிற்பியார் என வழங்குதலும் பொருத்தமாகும். என்னை? நலனில்லாச் சிலையுருவை உளியாற் செதுக்கி நலனிறைந்த திருவுருவமாக்குவோன் கைவல்ல சிற்பியெனப்படுவானன்றோ? அங்ஙனமாதலின், அயன்படைத்த படைப்பினும்பார்க்க நயன்படைத்த மெல்லிநல்லாரையும் ஆடவரையும் உருப்படுத்தியுதவும் நாடகக்கவியை யென்னென்று புகழ்ந்தேத்துவதென உன்னுமிடத்துச் "செகசிற்பிய"ரெனப் புகழ்ந்து போற்றுதல் சிறப்புடைத்தாமெனப் புலப்படுகின்றது.

கம்பநாட்டாழ்வார் அகலக்கவிகளுள் முதன்மைபெற்றுவிளங்குவதுபோலச் செகசிற்பியார் நாடகக்கவிகளுள் முதன்மைபெற்றுவிளங்குகின்றார். இவர் அமைத்த நாடகநூல்கள் தமிழறிஞர் வகுத்துரைத்த சந்தியுஞ் சுவையுஞ் சத்துவமும் பிறவு மென்னும் நாடகவுறுப்புக்களனைத்தும் செவ்விதி னமைந்துகிடக்கு மியல்பினவாதலின், அவற்றையாராய்தல் நாடகத்தமிழாராய்ச்சிக்கு இன்றியமையாததாமென எனது உள்ளத்துப் புலப்பட்டது. அஃதன்றியும், "வடவேங்கடந் தென்குமரி" யென வெல்லைவகுத்தது எழுத்திலக்கணத்துக்குஞ் சொல்லிலக்கணத்துக்கும் மாத்திரந்தானே. "இமையோர்தேளத்து மெறிகடல்வரைப்பினு-மவையில் கால மின்மை யான" வென்றமையால் அறம் பொருள் இன்பமும் அவற்றினது நுகர்ச்சியும், அவற்றைக்கூறும் பொருணூலும் நாடகநூலும் என்னும் இவை யாண்டும் ஒப்பமுடிந்தனவாம். ஆதலால், பிறமொழியாளர் வகுத்துரைத்த நாடகநூலுள் ஏற்பனவற்றைக் கொள்ளுதலால் எய்துவதோர் இழுக்கில்லை.

"இனி இசைத்தமிழ்நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன்செய்த பஞ்சபாரதீய முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத்தமிழ்நூலாகிய பரதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சாரார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு விறுதி காணாமையின் அவையு மிறந்தன போலும்" என ஆசிரியர் அடியார்க்குநல்லார் கூறினாராதலின், தொன்மை

வளஞ்சான்ற நாடகப்பெருநூல்கள் அவர்காலத்துக்குமுன்பே யழிந்து போயின. அவர்காலத் திருந்தநூல்களும் பின்ன ரழிந்தொழிந்தன. அடியார்க்குநல்லார் இயற்றியருளிய சிலப்பதிகாரவுரையில் ஆங்காங்குக் காட்டப்பட்டிருக்கும் நாடகவிலக்கணமுடிபுகளை யாதாரமாக நிறுத்திச் செகசிற்பியாருடைய நாடகநூல்களை இலக்கியமாகப் பொருந்தவைத்து ஆராய்வதுகருதிற்று இவ்வாராய்ச்சி. அடியார்க்குநல்லார்காலத்திருந்து பின்ன ரிறந்துபோன இசைநாடகநூல்களாவன:— "தேவவிருடியாகிய குறுமுனிபாற்கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டியென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநாகுலனென்னுந் தெய்வப்பாண்டியன் தேரொடு விசும்புசெல்வோன் திலோத்தமையென்னுந் தெய்வமகளைக் கண்டு தேரிற்கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச்செய்த இசைநுணுக்கமும், பாரசைவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார்செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார்செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கமிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார்செய்த முதநூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற மதிவாணர் நாடகத்தமிழ்நூலும்" என்பன.

மேலைப்பிரிவிலுட் குறிப்பிட்ட நூல்களினின்றும் எடுக்கப்பட்ட சூத்திரங்கள்சில அடியார்க்குநல்லாருரையால் அறியக்கிடக்கின்றன. அவற்றாலுணரப்படும் இலக்கணமரபுக்கு இலக்கியமாகிய நாடகங்கள் இறந்தொழிந்தன. பிற்காலத்துத்தோன்றிய நாடகங்கள் சந்தி, சுவை, பொருளொருமை யென்னு மிவற்றைத் தெளிவுறக்காட்டாது விரவி நடந்த காரணத்தால் அவற்றை இலக்கணமமைந்தநாடகங்களெனச் சொல்லுதற்கு இடமில்லை. இனிப் புதுநாடகமமைப்பதற்கு முற்படும் கவிஞருக்கு முறைபறிந்தமைப்பதற்கு உதவியாகிய கருவிநூலு மில்லை. செஞ்சொற்புலவர் செவ்விநிறைந்த நாடகங்களை யமைத்துதவாதகாரணத்தினாலே கல்வியறிவில்லாதார் கண்டகண்டவாறு நாடகங்களை யமைக்கமுற்பட்டு நாடகத்துக்கே ஓர் இழிந்த பெயரையுண்டாக்கிவிட்டனர். உயிர்க்குறுதிபயக்கு மருந்தினை உண்ணவிரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்துவைத்து உதவுகின்ற அன்புடையாளன்போல, உயிர்க்குறுதிபயக்கும் உண்மையினை

நவரசங்களுட் செறித்துவைத்து உதவுந்தீர்மையது நாடகம். நாடகக் கவி தன்னை யோர்வைத்தியனென அறிதல்வேண்டும். நோயாளியிடத்துப் பொருளினைப்பெறுதல்கருதிப் பொருந்தாப்பண்டத்தை மருந்தெனக்கொடுக்கும்வைத்திய னுளனாயின் அவனால் விளையுங் கேட்டுக்கோர் அளவில்லை. காமக்கனலை மூட்டுதற்கெண்ணிச் சிற்றின்பச்சரிதைகளை நாடகமாக்கியுதவும் போலிநாடகக்கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற கேடு மேற்குறித்த போலிவைத்தியனால் விளைகின்ற கேட்டினைப்பார்க்கினும் பல்லாயிரமடங்கு பெரிது. முத்தமிழினு ளொன்றாகிய நாடகத்தை வெறுத்தொதுக்காது அதனை யாராய்ந்து சீர்ப்படுத்தி நல்ல நாடகங்களையமைப்பது கற்றுவல்லோர்கடனாகும்.

நாடகவியலினை யாராயப்புகுந்த இச்சிற்றாராய்ச்சியிற் கண்ட முடிபுகளனைத்தும் பலநாளாக என் னுள்ளத்தினுட் பயின்றுகிடந்தன. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின இருபத்துமூன்றாம்வருடோத்ஸவதத்துக்குச் சென்றிருந்தபோது அவற்றினைத் தொகுத்துத் தமிழ்நாட்டுப்பெரும்புலவர் குழுமியிருந்த வித்துவக்கழகத்திற பெரும்புலவருட் பெரும்புலவராகிய மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்களது தலைமையின்கீழ் இயன்றவரை விரித்துக்கூறினேன். இவ்வாராய்ச்சி பயன்றாத்தக்கதென மஹாமஹோபாத்யாயரவர்களும் ஏனையபுலவர்களும் பாராட்டினார்களாதலாலும் சங்கத்துக் கௌரவகாரியதரிசியாராகவிருந்து தமிழபிவிருத்திக்காகப் பல்லாற்றானும் முயற்சித்துத் தமதுகைப்பொருளையும் நேரத்தையுஞ் செலவிட்டுவருபவரும் எனதுநண்பருமாகிய மதுரை ஹைக்கோர்ட்வக்கீல் ஸ்ரீமாக் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இவ்வாராய்ச்சியை விரிவுற எழுதி வெளியிடவேண்டுமென்று பலமுறை கூறி ஊக்கப்படுத்தினார்களாதலினாலும், இதனை எழுதி வெளியிடத் துணிந்தேன். சங்கப்புலவர் வீற்றிருந்து தமிழாராய்ந்த நான்மாடக் கூடலிலிருந்து இவ்வாராய்ச்சியை எழுதப்பெற்ற பெரும்பேற்றினை நினைக்கும்போது என் னுள்ளம் உருகுகின்றது. சிறியேனாகியயான் எடுத்துக்கொண்ட இக்கருமம் இனிது நிறைவுறும்பொருட்டு உலகமாதாவாகிய மீனாக்ஷியம்மையாரும் சோமசுந்தரக்கடவுளும் திருவருள் பாலிப்பாராக.

உறுப்பியல்.

க. திருமலியுலகினிற் புலவராற் பாடுதற்கமைந்த இருவகை வழக்கினுள்ளே நாடகவழக்கினை யாராயப்புகுந்த இவ்வாராய்ச்சியை உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று இயலாக வகுத்துக்கொள்வாம். முதனின்ற உறுப்பியலுள் நாடகவுறுப்புக்கள் இவையென ஆராய்ந்துணர்வாம். எடுத்துக்காட்டியலினுள், செகசிற்பியார் இயற்றிய நாடகங்கள் பன்னிரண்டினைச் சந்தியும் சுவையும்நோக்கி யாராய்வாம்; ஒழிபியலுள் எஞ்சிய நாடகவிலக்கணமுடிபுகளை இயன்ற வரை யாராய்ந்துணர்வாம்.

உ. நாடகம் - கதை தழுவிவருங்கூத்து. சாந்திக்கூத்தின்வகை நான்கினுள் இஃது ஒன்று என்ப. "சாந்திக் கூத்தே தலைவ னவிநய, மேந்திநின் றாடிய வீரிரு நடமவை, சொக்க மெய்யே யவிநய நாடக, மென்றிப் பாற்படு மென்மனார் புலவர்" என்றமையாற் சாந்திக்கூத்து நால்வகைப்படுமெனவும், அவ்வகைதாம் சொக்கம், மெய்க்கூத்து, அவிநயக்கூத்து, நாடகம் என்பனவாமெனவும் அறிகின்றாம். இவற்றுள், சொக்கமென்பது சுத்தநிருத்தம். மெய்க்கூத்து அகச்சுவைபற்றியெடுத்தலின் அகமார்க்கமெனப்படும். அவிநயக்கூத்தாவது நிருத்தக்கை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து. இவற்றின்விரிவைப் பின்னர் ஒழிபியலுட் கூறுவாம். சாந்திக்கூத்து என்னும் பெயர்க்காரணத்தை நோக்கும்போது, நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து ஆதலின் சாந்திக்கூத்தெனுங் குறியீடுபெற்றது என அறிகின்றாம். சாந்தமாக ஆடிய கூத்தை ஒருவகைப்படுத்துக்கூறலின், சாந்தமின்றியாடிய கூத்தும் உளவோவென ஆராய்தலொருதலை. கொற்றவைநிலை, காந்தள், வள்ளிக்கூத்து, கழனிலைக்கூத்து, பிள்ளையாட்டு, ஆர்மலைந்தாடியகூத்து எனப் புறத்திணையுட்கூறப்பட்ட பல்வகைக்கூத்தும், "மாற்றானொடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்-மேற்படக் கூறும் வென்றிக் கூத்து"ம், பல்வகையுருவமும் பழித்துக்காட்டவல்லவனொருவன் பிறர்இழுக்கத்தைப் புலப்படுத்தும்பொருட்டுப் பழித்துக்காட்டும் வசைக்கூத்தும், மறியறுத்துக் குருதிப்பலிசெலுத்தி வேலனைவழுத்திநின்றாடும் வெறியாடலும், குரவைக்கூத்து, கழாய்க்கூத்து, குடக்கூத்து, கரணக்கூத்து,

நோக்குக்கூத்து, தோற்பாவைக்கூத்து என அறுவகைப்பட்டுநின்ற விநோதக்கூத்தும் பிறவும் சாந்தநிலைதவறியநீர்மையவாதலின் சாந்திக் கூத்தின் வேறாயின.

௩. சாந்திக்கூத்தின்வகை நான்கினுள் ஈற்றில்நின்ற நாடகம் பல்லாற்றானும் சிறப்புடையது. உள்ளத்து நிகழ்ந்தநிகழ்ச்சியைப் பிறர்க்குப் புலப்படுத்துவதற்கு அவிநயம், இசை, மொழிப்பொருள் என்னும் மூன்றும் பயன்படுவன. இம்மூன்றினையும் தழுவிநின்றமையால் நாடகஞ் சிறந்தது. மொழிக்கு இயற்கையாகவமைந்த பொருள் கருவியாக உள்ளத்துநிகழ்ந்த மனக்குறிப்பினைப் பிறர்க்குப் புலப்படுத்துவது இயற்றமிழின்றன்மை. மொழிப்பொருளோடு இசையுஞ்சேர்ந்துநிற்க மனக்குறிப்பினை வெளிப்படுத்துவது இசைத்தமிழின்றன்மை. மொழிப்பொருள், இசையென்னும் இரண்டினோடு அவிநயமுஞ் சத்துவமுஞ் சேரவைத்து உள்ளத்தெழுந்த மனக்குறிப்பினைப் பிறருக்குப் புலப்படுத்துவது நாடகத்தமிழின்றன்மை. அங்ஙனமாதலின், குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் இவற்றோடுகூடிநின்ற ஒன்பதுவகைச் சுவையும் நாடகத்துக்கே சிறப்பியல்பாக வுரியனவென்பது பெறப்படுகின்றது. இவற்றினை நாடகத்தினுள் அமைக்குமிடத்துச் சாந்தநெறிதவறாதநீர்மையவாக அமைத்தல்வேண்டும். அங்ஙனம் அமைத்தற்குரியமார்க்கத்தை எடுத்துக்காட்டியலினுள் விரித்துவிளக்குவாம். இயற்றமிழுக்கு அணியெனவமைந்துநின்ற ஒன்பதுவகைச் சுவையும் நாடகத்தமிழுக்கு இன்றியமையா உறுப்புக்களெனநின்றனவாதலால் அவற்றினை இவ்வாராய்ச்சியினுள் விரிவுற வாராய்தலும்வேண்டும்.

௪. மேற்கூறியபடி சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் நான்கும் நாடகவுறுப்புக்களாம்; இவை யொருபாலாக இவற்றோடு பொருள், சாதி, யோனி, விருத்தி யென நான்கும், சொல், சொல்வகை, வண்ணம், வரி யென நான்கும், சந்தி, சேதம் என விரண்டும்கூடிய பதினான்கும் நாடகவுறுப்புக்களாம். இவற்றினுட் சந்தியென்னுமிலக்கணம் நாடகத்தினது அமைப்பினைக் காட்டும் நீர்மையதாதலின் முதலில் அதனையாராய்ந்து அப்பாற்செல்வாம். "சந்தியிற் றொடர்ந்து சருக்கமிலம்பகம், பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி" எனத் தண்டி

யாசிரியர் காப்பியவிலக்கணங் கூறினாராதலினால், சந்தியென்னும் இலக்கணம் காப்பியத்துக்கு முரியது. கத்தியரூபமாகமுடிந்த கதைகளுக்கு முரியது. சந்தி ஐந்துவகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என் விவை. இவற்றை ஒரு உதாரணத்தினால் விளக்குவாம். கீழ்மக்களது நட்பினை எய்துதலினும்பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை அறிவுறுத்துதற்கு ஒருபுலவன் ஒருநாடகம் அமைக்கப்போகின்றானென்று வைத்துக்கொள்ளுவோம்.

"செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று."

[செய்துவைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது நட்பு ஒருவர்க்குண்டாதலின் இல்லையாதல் நன்று.]

"உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்"

[தமக்குப் பயனுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாது நட்பினைப் பெற்றால் ஆக்கமியாது? இழந்தாற்கேடியாது?]

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்"

[ஒருவன் கெடுங்காலத்து அவனைவிட்டுநீங்குவார் முன் அவனோடு செய்தநட்புத் தன்னைக் கூற்றடுங்காலத்து ஒருவனினைப்பினும் அங்நினைத்த உள்ளத்தைச் சுடும்.]

மேற்காட்டிய மூன்று திருக்குறட் பாக்களும் அமைக்கப்புகுந்த நாடகத்துக்கு "வித்து" என்னும் நீர்மைய. வித்தினையெடுத்து உழவினாற் சமைக்கப்பட்ட புழுதியினுள்ளே விதைத்தால் அது முளைத்து, நாற்றாகிக், கருப்பமுற்றி, விரிந்து, கதிர்திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முற்றி விளைய, விளையப்பட்டபொருளை அப்பொருளுக்குரியோர் அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வார். இம்மரபே நாட்டியக்கட்டுரையும் ஐவகைப்படும். "முகமாவது எழுவகைப்பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுளிட்ட வித்துப் பருவஞ்செய்து முளைத்துமுடிவதுபோல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல்முதலாய் இலைதோன்றி நாற்றாய்முடிவது

போல்வது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட்பொருள்பொதிந்து கருப்பமுற்றிநிற்பதுபோல்வது. விளைவாவது கருப்பமுதலாய் விரிந்து கதிர்திரண்டிட்டுக் காய்தாழ்ந்து முற்றி விளைந்துமுடிவதுபோல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலிசெய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வதுபோல்வது". இங்ஙனம் ஐந்து சந்தியாகப் பகுத்துக்கொண்ட முறையினையே செகசிற்பியாரும் மாறாது கைக்கொண்டார். முளையினைக் கண்டோர் விளைவு இதுவென ஊகித்தறிந்துகொள்ளுதல்போல நாடகத்தின் முகத்தினைப் படித்தமாத்திரத்தே விளைவு இதுவாகும் என ஊகித்தறிந்துகொள்ளத்தக்கதாக முதற்சந்தியாகிய முகம் அமைக்கப்பட்டிருத்தல்வேண்டும். முதற்சந்தியாகிய முகத்தில் கட்டியக்காரன், விதூஷகன், சூத்திரதாரன், அரசன், மந்திரியென்னும் இவரைமாத்திரம் வருவித்து நிறுத்தி அரசன் நாட்டுவளம் விசாரிப்பதோடு முடித்துவிட்டால், பார்ப்போருடைய உள்ளம் ஒருவழிப்படாது பலவழியிலுஞ்சென்று மேல்நடப்பது இதுவாமோ அதுவாமோவென ஐயப்பாடுற்று அலையும். ஆதலினால் முதற்சந்தியாகிய முகத்திலேயே விளைவு ஒருவகையாகக் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். கீழ்மக்களது நட்பினையெய்துதலினும் பார்க்க எய்தாமை நன்று என்னும் உண்மையை யறிவுறுத்துதற்கு எழுந்தநாடகத்துக்கு நாடகபாத்திராவார் யாவராகவிருத்தல்வேண்டுமெனின், கதாநாயகனாக ஒரு செல்வப்பிரபு வேண்டும்; அவரது செல்வத்தையுண்டு அநுபவித்துப் பின்னர் வறுமைவந்துற்றகாலத்து அவரைவிட்டுப் பிரிந்து அவரை இகழ்ந்தவமதிக்கின்ற பொய்ந்நண்பர் ஒருவரோ பலரோ விருத்தல்வேண்டும்; பிரபுவுக்கு வேண்டியவிடத்து இடித்துரைகூறும் அறிவுடையோன் ஒருவன் இருத்தல்வேண்டும்; உண்மையுள்ள ஒரு வேலைக்காரன் இருத்தல்வேண்டும்; இச்சகம்பேசுவார் பல ரிருத்தல்வேண்டும் என்பது. செல்வப் பிரபுவானவர் நட்பாராயாது பலரையும் நட்புச்செய்தாரென்றும், இச்சகம்பேசுவோருக்குத் தமது பொருளெல்லாமளித்தகாரணத்தினாலே யவருக்கு வறுமைவந்துற்றது எனவும், தான் நட்பாளராகக்கருதியவரிடத்துச் சிற்றளவு உதவிபெறுதற்கு முயன்றாரெனவும், அன்னோர் மறுத்தாரெனவும், பிரபுவை யிழித்துரைத்தாரெனவும், பிரபு அன்னோர் தன்முன் னிருக்காது காட்டிற்சென்றனரெனவும், ஆங்கு ஒரு பொற்

குவை யகப்பட்டது எனவும், அவர் பொன்னால்விளையும்கேட்டை யனுபவித்தவ ராதலினால், பொற்குவியலைக் கருதிற்றிலரெனவும், அவ்வழி ஒருசேனைத்தலைவன்சென்றானெனவும், அவன் அப்பிரபுவின்பக்கலிருந்த பொற்குவியலைக்கண்டு விழைந்துநின்றானெனவும், அவனை அக்குவியலை யெடுத்துக்கொள்ளும்படி பிரபு அநுமதிகொடுத்தாரெனவும், அதனைப் பெற்ற போர்வீரன் நன்றியறிதலுக்கு அறிகுறியாகப் பிரபுவின்நாட்டினைத் தாக்கித் தீநட்பாளரை யழித்தானெனவும், இவ்வாறே பிற வாறே பொருளை வகைசெய்து நாடகக்கட்டுரை வகுத்துக்கொண்டபின்பு ஏற்றபெற்றியறிந்து ஐந்துசந்தியாகப் பகுத்துக்கொள்ளலாம். செகசிற்பியார் இத்துறைமேல் "தீநட்பஞ்சிய தீமோன்சரிதை" எனப் பெயரிய ஒரு நாடகஞ் செய்திருக்கின்றார். அதன் சந்திமுதலியவற்றை எடுத்துக்காட்டியலினுட் கூறுவாம். சேதம் என்பது கதையை நாடகத்துக்கொப்பச் சேதித்திடுவது. பாதுகாபட்டாபிஷேகம், வாலிமோக்ஷம், குசலவசரிதை என்னும் நாடகங்கள் இராமாவதாரப் பெருங்காப்பியத்தின் பாகங்களாயினமையை நோக்குக.

௫. இனிச், சுவை குறிப்பு சத்துவம் அவிநயம் என்னும் நான்கு உறுப்புக்களையும் ஆராய்ந்துணர்வாம். ஒன்பது சுவையாவன: வீரச்சுவை, அச்சச்சுவை, இழிப்புச்சுவை, அற்புதச்சுவை, இன்பச்சுவை, அவலச்சுவை, நகைச்சுவை, நடுவுநிலைச்சுவை, உருத்திரச்சுவை யென்பன. இவற்றினுள் நடுவுநிலை ஐம்புலமடங்கிய அறிவர்பால் நிகழ்வது. இவர் காமம் வெகுளி மயக்கத்தினின்று நீங்கியவராதலால், யாவருங் கண்டஞ்சும் யமனுக்கும் அஞ்சார்; எத்துணை இளிவரல்காணினும் இழித்துக்கூறார்; கல்வி நிறைந்திருந்தும் அதனைப் பொருளெனக் கொள்ளாக் காரணத்தினாற் பெருமிதங் காட்டார்; புதுமை, பெருமை, சிறுமை, ஆக்க மென்பன நிலையில்பொருள்களென அறிவாராதலினால், அவற்றினைக்கண்டு வியப்புறார்; துன்பம் வந்தெய்தாத் தூயவுள்ளத்தை யுடையாராகிய இவர் இன்பத்தை விழையார்; நகையாடார்; வெகுளார். ஆதலினாற் சமநிலை யெனப்படும் நடுவுநிலை பொருந்திநிற்கும் நல்லோரிடத்து "நகையே யழுகை யிளிவரன் மருட்கை, யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென, றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப" எனத் தொல்லாசிரியர் வகுத்துக்கூறிய எண்வகைமெய்ப்பாடும் நிகழாவாம். ஒரோவழி நிகழுமிடத்துக் காமம் பற்றுக்கோடாக நிகழாது அருள் பற்றுக்

கோடாக நிகழுமென்பது. இக்காரணத்தினாற்றான் "பண்ணைத் தோன் றிய வெண்ணான்கு பொருளும், கண்ணிய புறனே நானான் கென்ப" என முடியுடைவேந்தருங் குறுநிலமன்னரு முதலாயினோர் நாடகமகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் காமநுகரும் இன்பவிளையாட்டினுட் டோன்றிய மெய்ப்பாட்டுவகையை யுணர்த்தப்புகுந்த ஆசிரியர் தொல் காப்பியனார் நடுவுநிலையை ஒன்றாகவைத்து ஓதாராயினர். "ஆங்கவை யொருபா லாக வொருபால், உடைமை யின்புற னடுவுநிலை யருளல்" என்னுஞ் சூத்திரத்துள் நடுவுநிலை கூறப்பட்டது. ஒன்பது சுவையி னுள் ஒன்றாகிய நடுவுநிலையொழித்து ஒழிந்தனவற்றைக் கூறுதலின் மெய்ப்பாடு எட்டாயின.

௬. இவற்றினுள் இன்பம் (உவகை), நகை, வியப்பு (மருட்கை) என்னும்மூன்றும் ஒருபாலாகி யகத்திணையைச் சார்ந்துநின்றன. வீரம், வெகுளி (உருத்திரம்), அவலம் (அழுகை), அச்சம், இளிவரல் என்னும் ஐந்தும் ஒருபாலாகிப் புறத்திணையைச் சார்ந்துநின்றன. அகத்திணையி னுள் வீரமுதலிய ஐந்தும் புறத்திணையினுள் இன்பமுதலிய மூன்றும் ஓரோவழித் தோற்றுவவெனினும் பெருவரவுபற்றி இவ்வாறு வகுத்துக் கொள்ளுதலால் எய்தியதோர் இழுக்கில்லை. அகத்திணையைச் சார்ந்து இன்பம், நகை, வியப்பு என்னும் மூன்று மெய்ப்பாடும் தோற்றநின்ற நாடகங்களை மேனாட்டார் கமிடி (comedy) யென்பர்; புறத்திணையைச் சார்ந்து வீரமுதலிய வைந்தும் விளங்கநின்ற நாடகங்களை மேனாட்டார் றிரூஜெடி (tragedy) யென்பர். இவற்றை நாம் முறையே வேத்தியல் பொதுவிய லென வழங்கலாகும். "காடுகெழுசெல்விக்குப் பாவுக்கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப்புறக்கூறி வழுத்திநின் றாடும் கொற்றவைநிலையாகிய பொதுவியற்கூத்தும், வெறியாட்டயர்ந்த வெங்களத்துக் குருதிப்பலிசெலுத்தி வேலனை வழுத்திநின்றாடும் காந்த ளாகிய பொதுவியற்கூத்தும் ஒருபுடை யொப்பெனற்குரிய பொதுவியற் கூத்தே பண்டை யவனபுரத்தில் றிரூஜெடி என்னும் பெயரால் வழங்கப் பட்டது; றிருஜெடி யென்னுஞ் சொல்லுக்குப் பொருள் "ஆட்டுமறிக் கவிதை" யென்பது; உண்டாட்டுத்தெய்வமாகிய தயனிச (Dionysus) னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங்காலத்து, ஒரு ஆட்டுக்கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க்கீர்த்தியையும் அவனைப் பாவும் வீரதுபுகழையுங் கூறுவதே றிரூஜெடிக்கு உரியபொருளாயிருந்தது

எனவும், வேனில்வேள்ஆகிய மயனிசன் என்னுந் தெய்வத்துக்கு விழாக் கொண்டாடுங்காலம் மாவும் புள்ளுந் துணையெடுவதியும், வசந்தகாலமாதலினால் அக்காலத்து உண்டாட்டினுற் களிதியங்கி னோரும் யாறுங் குளனுங் காவு மாடிப் பதிபிகந்து காமநுகர்வோரு மாகிய இளையாருடைய உள்ளத்தில் உவகையும் நகையும் தோற்றுவது இயல்பேயாம்; நகைச்சுவையும் உவகைச்சுவையும் நிறைந்த நாடகங்கள் கமிடி எனப் படுவன; இச்சொல்லுக்குப்பொருள் சிறுகுடிப்பாட்டு, பண்ணைப்பாட்டு என்று கொள்ளலாகும்," எனவும் யாம் மேற்றிசைச் செல்வம் என்னும் தொடர்நிலையுரையினுட் கூறியன ஈண்டு ஆராயத் தக்கன.

எ. சுவையை யாராயுமிடத்துச் "சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்பும், குறிப்புக்கள்பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர்சிலிர்த்தலு முதலாக உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை யெட்டோடுங்கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ முப்பத்திரண்டாம்," எனப் பொருளதிகாரவுரை யாசிரியர் கூறினர். சுவைக்கப்படும்பொருளையும் சுவையுணர்வையும் இருவேறுநிலனாகவைத்து ஆராய்ந்தமைக்கு அவர் கூறிய காரணங் களைத் தருவாம். "நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவானொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச்சுவையெனப்படும். வேம்பென்னும்பொருளும் நாவென்னும்பொறியும் தலைப்பெய்தவழியல் லது கைப்புச்சுவை பிறவாததுபோல், அப்பொருள் கண்டவழியல்லது நகையும் அச்சமுந் தோன்றா. ஒழிந்த காமமுதலியனவும் அன்ன. இக் கருத்தேபற்றிப் பிற்காலத்து நாடகநூல்செய்த ஆசிரியரும் 'இருவகை நிலத்தி னியல்வது சுவையே' என்றுரென்பது. இனி இருவகைநில னென்பன உய்ப்போன்செய்தது காண்போர்க்கெய்துதலன்றோவெனின், சுவையென்பது ஒப்பினுனபெயராகலான் வேம்புசுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினுற் பிறனுணரான், இவன் கைப்புச்சுவைத்தா னெனக் கண்ணுணர்வினுன் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒருபொருள் கண்டு அஞ்சி ஓடிவருகின்றுனொருவனை மற் றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற்றரிமா முதலாயினகண்டு

அஞ்சினு னென்றறிவதல்லது வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான்கண்டானுயின் அதுவுஞ் சுவையெனவேபடும். ஆகவே அஞ்சினுனைக் கண்டு நகுதலுங் கருணைசெய்தலும் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின்பெற்றியாற் செல்லாதாகலின் இருவகை நிலமெனப்படுவன சுவைப்பொருளுஞ் சுவைத்தோனு மென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல்வேண்டுமென்பது." சுவைக்கப்படும் பொருளும் சுவையுணர்வுங் கூடியவழிச் சுவைபிறக்குமென அறிந்தாம்; குறிப்பு என்பது இவற்றின் வேறுபட்டதோவெனின், "குறிப்பென்பது, கைப்பின் சுவையுணர்வுபிறந்தவழி வெறுப்புமுதலாயின உள்ளநிகழ்ச்சிபோல அஞ்சுதக்கனகண்டவழி அவற்றை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி" யாதலினுல் இது சுவைக்கப்படும்பொருள் சுவையுணர்வு என்னும் இரண்டினும் வேருயது என்று அறிதல்வேண்டும். சத்துவம் என்பது, அவ்வுள்ளநிகழ்ச்சிபிறந்தவழி வேம்புதின்ருர்க்குத் தலை நடுங்குவதுபோலத் தாமே தோன்றும் நடுக்கமுதலாயின. அங்ஙனந் தோன்றிய சத்துவத்தைப் பிறருக்கறிவுறுத்தும்பொருட்டுப் பாவகப் படுத்துஞ்செய்கை அவிநயம எனப்படும். இவற்றை யினனும் தெளிவுறவிளக்கும்பொருட்டு மனநூன் (Psychology) முடிபு சிலவற்றைத் தருவாம். காட்டிற்சென்ற ஒருமகன் ஒருவேங்கைப்புலியைக் கண்டான். கண்டமாத்திரத்தி லவனுள்ளத்தே யச்சவுணர்வு தோன்றிற்று. அவ்வரிவேங்கை தன்னுயிரை வௌவுமேயென்று அவன் எண்ணியவழி அச்சக்குறிப்புத தோன்றிற்று; அச்சக்குறிப்புத்தோன்ற உடல் நடுக்கமாகிய சத்துவந்தோன்றிற்று. இங்ஙனம் அஞ்சிய மகன் பின்னுளில் நாடகவரங்கத்து முன்னர்த் தான் அநுபவித்த சுவையுணர்வைப் பிறர்க்குப் புலப்படுத்தமுயன்றவெல்லையிற் பாவகமாகிய அவிநயம் பிறக்கும். ஆசிரியர்செயிற்றியனுர் சுவையுணர்வையுஞ் சுவைப்பொருளையும் ஒன்ருக அடக்கிச் சுவை, குறிப்பு, சத்துவம் என மூன்ருக்குவர்; அவிநயத்தைத் தனித்துக்கூறுவர். குறிப்புஞ் சத்துவமும் சுவையினுள்ளடங்க "எண்ணான்கு பொருளும்" எட்டாய்முடிவனவாதலின், "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" என ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறினுர்.

அவர் சமநிலைகூறுமைக்குப் பொருளதிகாரவுரையாசிரியர் காட்டிய காரண மெதுவெனின் "சமநிலைக்கு ஓர்விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதில னென்பது; அதற்கு விகாரமுண்டெனின் முன்னையெட்ட னுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப்படும். அஃதல்லதூஉம் அஃது உலகியல் நீங்கினாரெற்றியாகலின், ஈண்டு உலகவழக்கினுட் சொல்லியதிலனென் பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினான" என்பது.

அ. சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்னும் இவற்றினது இலக்கணத்தை இப்பிரிவினுள் தொகுத்துக்கூறுவாம்; மேல் எடுத்துக் காட்டியவினுள் இலக்கியங்காட்டி விரித்துவிளக்குவாம்.

நகை:—"எள்ள விளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

எள்ளல் என்பது இகழ்ச்சி. தான் பிறரையெள்ளிநகுதல், பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதல், இளமையாற் பிறரை நகுதல், பிற ரிளமைகண்டு தான் நகுதல், தன்பேதைமையாற் பிறரை நகுதல், பிறர் பேதைமைபொருளாக நகைதோன்றுதல், தன்மடத்தால் நகைதோன்று தல், பிறர்மடம் பொருளாக நகை தோன்றுதல் என நகைக்குறிப்பு எட்டாகும்.

"நகையி னவிநய நாட்டுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது......................
விட்டுமுரி புருவமொடு விலாவுறப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன வென்ப."

அழுகை:—"இளிவே யிழவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே"

இளிவென்பது பிறரான் இகழப்பட்டு எளியனாதல் இழவென்பது தந்தையுந் தாயு முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவென்பது பண்டைநிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமையென்பது போகந்துய்ப் பப்பெறாத பற்றுள்ளம். இவை நான்குந் தன்கட்டோன்றினும் பிறன் கட்டோன்றினும் அவலமாமென்பது

"அவலத் தவிநய மறிவாக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைகை யழிதலும் நீர்மையில் கிளவியும்
பொறையின் முகலும் புணர்த்தினர் புலவர்".

இளிவரல்:—"மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர லுன்கே"

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை யென நான்கு பொருள்பற்றிப் பிறக்கும் இளிவரல். இவை முன்னையபோலத் தன்கட் டோன்றுவனவும் பிறன்கட்டோன்றுவனவும்பற்றி எட்டாதலுடைய.

"இழிப்பி னவிநய மியம்புங் காலை
யிடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலு
மொடுங்கிய முகமு முளுற்றுக் காலுஞ்
சோர்ந்த வாக்கையுஞ் சொன்னிரம் பாமையு
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே."

மருட்கை:—"புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"

புதிதாகக் கண்டனவும், கழியப் பெரியவாயினவும், இறப்பச்சிறியனவும், ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவுமென நான்கும்பற்றி வியப்புத்தோன்றும். இவையும் தன்கட் டோன்றினவும் பிறன்கட் டோன்றினவுமென எட்டாதலுடைய.

"அற்புத வவிநய மறிவாக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய விமைத்தலும் விழித்தலு மிகந்ததென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப."

அச்சம்:—"அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்
பிணங்கல் சாலா வச்ச நான்கே"

"அணங்கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண்கணனும் நிரயப் பாலரும் பிறரும் அணங்குதற்றொழிலாகிய சவந்தினபெண்டிர் முதலாயினாரும் உருமிசைத்தொடக்கத்தனவு மெனப்படும். விலங்

கென்பன் அரிமாமுதலாகிய அஞ்சுதக்கன. கள்வரென்பார் தீத்தொழில் புரிவார். இறையெனப்படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முத லாயினர். பிணங்கல் சாலா அச்சமென்றதனல் முன்னையபோல விவை தன்கட் டோன்றலும் பிறன்கட் டோன்றலுமென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிதுபொருள்பற்றியே வருமென்பது".

"அச்ச வவிநய மாயுங் காலை
யொடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையு
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுள்ளமுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிசைபண் பினவே."

பெருமிதம்:—"கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே"

"கல்வியும் தறுகண்மையும் புகழுங் கொடையும் என்னும் நான்கும் பற்றி வீரம் பிறக்கும். இச்சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதமென் றெண்ணினன்; என்னை? எல்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமித மெனப்படும் என்றற் கென்பது. கல்வி யென்பது தவ முதலாகிய வித்தை. தறுகணென்பது அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை. இசைமை யென்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப் பினும் பழியொடுவருவனசெய்யாமை. கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப்பொருளுங் கொடுத்தல்". இது தன்கட்டோன்றிய பொருள்பற்றி வரும். மேற்கூறிய நான்கனுள் அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமையாகிய தறுகண்மை அடு களத்து முன்னணியினிற்கும் போர்வீரனது பெருமிதத்தைக் குறிப் பது. இதனியல்பைப் பின்வருஞ் சூத்திரங் கூறுகின்றது.

"வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறும்
மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

வெகுளி:—"உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே."

உறுப்பறையென்பது, கைகுறைத்தலும் கண்குறைத்தலும் முதலாயின; குடிகோளென்பது, தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடுசூழ்தல்; அலையென்பது, கோல்கொண்டலைத்தல் முதலாயின; கொலையென்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். இது பிறன்கட் டோன்றியபொருள்பற்றிவரும்.

"வெகுண்டோ னவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயு மலர்ந்த மார்புந்
துடித்த புருவமுஞ் சுட்டிய விரலும்
கன்றின வுள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமொ டாய்ந்தனர் கொளலே."

உவகை:—"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்ல னீத்த வுவகை நான்கே"

செல்வம் என்பது நுகர்ச்சி. புலனென்பது கல்விப்பயனாகிய அறிவுடைமை புணர்வு காதலிருவர் கருத்தொத்தல். விளையாட்டு யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்துவருதல். தன்கட்டோன்றியபொருள் பற்றியும் பிறன் கட்டோன்றிய இன்பம்பற்றியும் உவகை பிறக்கும்.

"காம வவிநயங் கருதுங் காலைத்
துவள் ளுறுத்த வடிவுந் தொழிலும்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலு
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தாரே."

நடுவுநிலை:—"செஞ்சாந் தெறியினுஞ் செத்தினும் போழினு
நெஞ்சஞ்சோர்ந் தோடா நிலை"

இது நாம் முற்கூறியவாறே காம வெகுளி மயக்க நீங்கினார் கண்ணே நிகழ்வது.

"நாட்டுங் காலை நடுவுநிலை யவிநயங்
கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியும்
அறந்தரு நெஞ்சமும் ஆகிய விழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையுங்

குறிப்பின் ருகலுந் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையும்
அளத்தற் கருமையும் அன்பொடு புணர்தலும்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்."

௬. எள்ளல்முதலாக விளையாட்டு இறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் ஒருபாலாக உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை நடுக்கம் என்னும் இவையும் மெய்ப்பாடாம் மேற்கூறியவற்றின்பொருண்மைய வல்லாதவிடத்து. இவற்றினுட் சிலவற்றுக்கு முந்தையோர் கூறிய இலக்கணத்தை எடுத்து மொழிவாம்.

இன்புறல்:—"இன்பமொடு புணர்ந்தோ னவிநய மியம்பிற்
றுன்ப நீங்கித் துவர்த்த யாக்கையும்
தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையு
மயங்கி வந்த செலவுநனி யுடைமையும்
அழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையும்
எழிலொடு புணர்ந்த நறுமல ருடைமையும்
கலங்கள்சேர்ந் தகன்ற தோண்மார் புடைமையு
நலங்கெழு புலவர் நாடின ரென்ப."

இதனொடு தொடர்புடைய உவந்தோனவிநயம் வருமாறு:—

"உவந்தோ னவிநய முரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மல ருடைமையு
மினிதி னியன்ற வுள்ள முடைமையு
முனிவி னகன்ற முறுவனகை யுடைமையு
மிருக்கையுஞ் சேறலுங் கானமும் பிறவும்
ஒருங்குட னமைந்த குறிப்பிற் றன்றே."

அன்பு:—"அன்புக்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்."

அடக்கம்:—"ஒருமையு ளாமைபோ லைந்தடக்கல்,"
"கதங்காத்துக் கற்றடங்கல்,"

தன்மை:—"உலகத்தோடொட்டவொழுகல்."

ஐயம்:—"பொய்யில் காட்சிப் புலவோ ராய்ந்த
ஐய முற்றோ னவிநய முரைப்பின்
வாடிய வுறுப்பு மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும்
அறைந்தனர் பிறவு மறிந்திசி னோரே."

அழுக்காறுமை:-"அழுக்கா றுடையோ னவிநய முரைப்பி
னிழுக்கொடு புணர்ந்த விசைபொரு ளுடைமையுங்
கூம்பிய வாயுங் கோடிய வுரையும்
ஒம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையு
மாரணங் காகிய வெகுளி யுடைமையுங்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையு
மெலிவொடு புணர்ந்த விடும்பையு மேவாப்
பொலிவு மென்ப பொருந்துமொழிப் புலவர்."

துஞ்சல்:—"துஞ்சா நின்றோ னவிநயந் துணியி
னெஞ்சுத லின்றி யிருபுடை மருங்கு
மலர்ந்துங் கவிழ்ந்தும் வருபடை யியற்றியும்
அலக்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்".

மடிமை:—"மடியி னவிநயம் வருக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையு
மூரி நிமிர்த்தலு முனிவொடு புணர்தலுங்
காரண மின்றி யாழ்ந்துமடிங் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டணிதரு புலவ ராய்ந்தன ரென்ப."

மேற்கூறியவற்றுள் வெகுண்டோ னவிநயம், ஐயமுற்றோனவிநயம், மடியினவிநயம், அழுக்காறுடையோனவிநயம், இன்பமொடுபுணர்ந்தானவிநயம், துஞ்சாநின்றானவிநயம் என்பனவற்றோடு களித்தோனவிநயம், தெய்வமுற்றோனவிநயம், ஞஞ்ஞையுற்றோனவிநயம், சிந்தையுடம்பட்டோனவிநயம், இன்றுயிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலைப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட்டோனவிநயம், நாணமுற்றோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், கண்ணோவுற்றோனவிநயம், தலைநோவுற்றோனவிநயம், அழற்றிறப்

பட்டோன்விநயம், சீதமுற்றோனவிநயம், வெப்பமுற்றோனவிநயம், நஞ்சுண்டோனவிநயம் என்னும் இவற்றையும் ஒருபடியாகவைத்து ஓதுவர் நாடகநூலாசிரியர். எஞ்சியவற்றின் இலக்கணத்தை ஒழிபியலுட்டருவாம்.

௧0. இனிப் பொருள், சாதி, யோனி, விருத்தி என்னும்நான்கினையும் ஆராய்வாம். அவற்றுள், பொருளாவது நான்குவகைப்படும். என்னை? "அறம்பொரு ளின்பம் வீடென நான்கும்—திறப்படு பொருளெனச் செப்பினர் புலவர்."

சாதி நான்குவகைப்படும். "அறமுத லன்கு மொன்பான் சுவையு, முறைமுன் னுடைக மூன்றே னாகும்" என ஆசிரியர் செயிற்றியனார் கூறினாராதலினால் அறமுத லாற்பொருளும் ஒன்பதுவகைச்சுவையும் பெற்றுவருவது அந்தணர் சாதி. "அறம் பொருளின்பம் அரசர்சாதி" "அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப." "அறமேற் சூத்திரசங்கமாகும்" என ஆசிரியர் செயிற்றியனார் கூறியவாற்றால் ஏனையமூன்று சாதியும் அறிந்துகொள்க. இவை நான்கும் நாடகமேயாம். வடமொழி வழக்குப்பற்றி நாடகம் பிரகரணப்பிரகரணம், பிரகரணம், அங்கமெனப் பெயரிட்டுவழங்குதலும் பொருந்தும். "அவைதாம், நாடகம் பிரகரணப் பிரகரணம், ஆடிய பிரகரண மங்க மென்றே, யோதுப நன்னூலுணர்ந்திசி னோரே" என்றார் ஆசிரியர் மதிவாணனார்.

யோனி நான்குவகைப்படும். உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் றலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனாக இல்லதோர்பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர்பொருண்மேற்செய்தலுமென விவை; என்னை? "உள்ளோற் குள்ளது மில்லோற் குள்ளது, முள்ளோற் கில்லது மில்லோற் கில்லது, மெள்ளா துரைத்தல் யோனியாகும்" என்றாராகலின்.

விருத்தி நான்குவகைப்படும். அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி யென விவை. இவற்றுள், சாத்துவதியாவது அறம் பொருளாகத் தெய்வ மானிடர் தலைவராக வருவது. ஆரபடியாவது பொருள்

பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது. கைசிகியாவது காமம் பொருளாகக் காமுகராகிய மக்கள் தலைவராக வருவது. பாரதி விருத்தியாவது அசுரரைக்கொல்ல அமரராடின பதினோராடலும். இது தெய்வவிருத்தியெனவும்படும்.

கக. பதினோ ராடலாவன:—

"கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து."

இவற்றி னிலக்கணஞ் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையினுட் கூறப்பட்டிருக்கிறது. அதனை ஈண்டுத்தருவாம்.

"மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகைப் பாணியும் நலம்பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமையவ ளொருதிற னாக வோங்கிய
விமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன்பாண் டரங்கமும்
கஞ்சன் வஞ்சங் கடத்தற் காக
அஞ்சன வண்ண னாடிய வாடலு
ளல்லியத் தொகுதியு மவுணற் கடந்த
மல்லி னாடலு மாக்கட னடுவ
ணீர்த்திரை யரங்கத்து நிகர்த்து முன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடியும்
படைவீழ்த் தவுணர் பையு ளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும்
வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னாடிய குடமு
மாண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காம னாடிய பேடி யாடலும்

காய்சின வவுணர் கடுந்தொழில் பொறாஅண்
மாயவ ளாடிய மரக்கா லாடலுஞ்
செருவெவ் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும்
வயலுழை நின்று வடக்கு வாயிலு
ளயிராணி மடந்தை யாடிய கடையமு
மவரவ ரணியுட னவரவர் கொள்கையி
னிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோராடலும்.”

அநிருத்த நாடகத்தினுள்ளே மேற்கூறிய பதினோராடலுள் நான்கு ஆடல் காணப்படுகின்றன. காமன்மகன் அநிருத்தனைத் தன்மகள் உஷை காரணமாக வாணாசுரன் சிறைவைத்தான். அநிருத்தனது சிறையை மீட்கக்கருதி அவனது சோ என்னும் நகரவீதியிற்சென்று நிலங்கடந்த நெடுமுடியண்ணல் பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் செய்த குடங்கொண்டாடியகூத்துக் குடக்கூத்து. வாணனுடைய பெரிய நகரின் வடக்குவாயிற்கண் உளதாகிய வாயிலிடத்தே நின்று அயிராணி மடந்தை உழத்தியர்கோலத்தோடு ஆடியகூத்துக்கடையமெனப்படுவது. அஞ்சனவண்ணனாகிய கண்ணன் மல்லர்கோலமாகச் சென்று வாணனை உயிர்போக நெரித்துத் தொலைத்த கூத்து மல் எனப்படுவது. தனது மகன் அநிருத்தனைச் சிறைமீட்டுக் காமன் ஆண்மைதிரிந்த பெண்மைக் கோலத்தோடு சோநகரவீதியி லாடியகூத்துப் பேடு என்ப்படுவது. அஞ்சனவண்ணனாடிய ஆடல் பத்துள், கஞ்சன் வஞ்சத்தின்வந்த யானையின்கோட்டை ஒசித்தற்கு நின்றாடிய கூத்து அல்லியத்தொகுதி யென்பது. கொடுகொட்டியும் பாண்டரங்கமும் திரிபுரமெரித்தகாலத்திலே இறைவனாடிய கூத்து. “தேவர் திரிபுரமெரியவேண்டுதலால் வடவையெரியைத் தலையிலேயுடைய பெரியவம்பு ஏவல்கேட்டவளவிலே அப்புரத்தில் அவுணர் வெந்துவிழுந்த வெண்பலிக்குவையாகிய பாரதியரங்கத்திலே (பாரதி—பைரவி, அவளரங்கம்—சுடுகாடு) உமையவள் ஒருகூற்றினளாய்நின்று பாணி தூக்குச் சீ ரென்னுந் தாளங்களைச் செலுத்தத் தேவர்யாவரினு முயர்ந்த இறைவன் ஜய ஆனந்தத்தாற் கைகொட்டிநின்று ஆடியது கொடுகொட்டி” யென்பது. தேவரானமைந்த தேரின்முன் சாரதியாகிய திசைமுகன் காணும்படி பாரதிவடிவாகிய இறைவன் வெண்ணீற்றையணிந் தாடியகூத்துப் பாண்டரங்கம் எனப்படும். சூரபத்மன் மாமரமாகிக் கருங்கடலினடுவுநிற்க அவனது வேற்றுருவாகிய வஞ்

சத்தை யறிந்த முருகக்கடவுள், கடலினடுவே திரையே அரங்கமாக நின்று துடிகொட்டியாடிய கூத்துத் துடிக்கூத்து. அவுணர் தாம்போர் செய்தற்கெடுத்த படைக்கலங்களைப் போரிற்காற்றாது போகட்டு வருத்த முற்றவளவிலே முருகக்கடவுளானவர் தமது குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுகவெழினியாக நின்றாடிய கூத்துக் குடைக் கூத்து. காயுஞ்சினத்தையுடைய அவுணர் வஞ்சத்தாற் செய்யுங் கொடுந்தொழிலைப் பொருளாய்த் துர்க்காதேவி ஆடிய கூத்து மாக்கால் என்னும் பெயரையுடையது. அவுணர் வஞ்சனையினாற் பாம்பு தேள் முதலியவாகப் புகுதல்கண்டு தம்மை அவற்றை உழக்கிக் களைதற்கு மாக்கால்கொண்டு ஆடினளாதலினால் மாக்காலாடலாயிற்று. அவுணர் போர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலததோடு மோகித்து வீழும்படி செய்யோளாகிய திருமகள் கொல்லிப்பாவைவடிவாய்நின்று ஆடிய கூத்துப் பாவை யென்னு மாடலாகும். "மாயோன் பாணியும் வருணப் பூதர், நால்வகைப்பாணியு நலம்பெறு கொள்கை, வானூர் மதியமும் பாடி" என்பதனை ஒழிபியலுள் ஆராய்வாம்.

கஉ. இனி எஞ்சிநின்ற சொல், சொல்வகை, வண்ணம், வரி யென்னும் நான்கினையும் ஆராய்வாம். சொல் மூன்று வகைப்படும்; உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல்லென; அவை முறையே நெஞ்சொடுகூறல், கேட்போர்க்குரைத்தல், தானேகூறல் என விவை. "நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல், தஞ்சம் வாவறிவு தானே கூறலென், றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே."

சொல்வகை நான்குவகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகமென. சுண்ணம் நான்கடியான்வருவது; சுரிதகம் எட்டடியான் வருவது; வண்ணம் நாலுன்கடியான்வருவது; வரிதகம் முப்பத்திரண் டடியான்வருவது.

"வண்ணந் தானே நாலைந் தென்ப"

"அவைதாம், பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண

மொழுகு வண்ண மொரூஉ வண்ணம்
எண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றுங்கன மறிப வறிந்திசி னோரே''

யென்பதனால் வண்ணம் அறிக. பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ண மென வகுத்தும், நூறுவண்ணமாக விரித்துங் காட்டுவாருமுளர்.

வரிப்பாடலாவது: "பண்ணுந் திறனும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி, மயங்கச்சொல்லப்பட்ட எட்டனியில்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியுங் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியுஞ் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும்" அது தேவபாணியாகவும், மக்களைப்போற்றும்பொருண்மைத்தாகவும், திணைநிலைவரி இணைநிலைவரி யென இருவகையாகவும், கண்கூடுவரி, கானல்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக் கோள்வரி யென எட்டுவகையாகவும் வரிப்பாடல் ஆராயப்படும். இவற்றின் விரிவை ஒழிபியலுட் கூறுவாம்.

"விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப்
பொருளும் யோனியும் விருத்தியுஞ் சந்தியும்
சுவையுஞ் சாதியுங் குறிப்புஞ் சத்துவமு
மவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும்
வரியுஞ் சேதமு முளப்படத் தொகைஇ
யிசைய வெண்ணி னீரே ழுறுப்பே''

என வகுத்து, பதினான்கு விலக்குறுப்பினிலக்கணத்தை உறுப்பியலாகிய இம் முதலியலுட் கூறினும்; கூத்தின்வகை, அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கு முரிய உருக்கள், கூத்துவிகற்பங்களுக்கமைந்த வாச்சியக்கூறுகள், அகக்கூத்துக்கும் புறக்கூத்துக்கு முரிய ஆடல்கள், பாடல், பாணி, தூக்கு, பிண்டி, பிணையல், குரவை, வரி, அரங்கினமைதி என்னுமிவற்றையெல்லாம் ஒழிபியலுட் கூறுவாம்.

(தொடரும்)

விபுலானந்தர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

இருபத்திரண்டு, இருபத்துமூன்ருவது வருஷோத்ஸவ

மங்களவாழ்த்து

தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர்

ஸ்ரீமத் சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்

பாடியது.

கலிவெண்பா.

தண்ணமிழ்தை நேருந் தமிழுந் தமிழ்நிலமும்
எண்ணரிய வைக விழைத்தபெரும்—புண்ணியமே
ஓருருவா யுற்றிவ் வுலகினிடைப் போந்ததெனப்
பேருலகம் பேசும் பெருமையோன்—சீருலவு
பாலவ னத்தப் பதியாளன் பாவலரைச்
சால வனத்தந் தவிர்த்தாள்வோன்—கோலப்
பிறைமதியஞ் சூடும் பெருமானை யல்லால்
இறையெனமற் றோர்கடவு ளெண்ணுன்—நிறைமதியான்
சொல்லாரும் பாண்டித் துரைசெந் தமிழ்ப்புலமை
யெல்லாரு மெய்தியிவ ணின்புறுவான்—மல்லாரு
மஞ்சுதவ ழிஞ்சி வளமாடக் கூடலிதில்
நெஞ்சுவகை கூர்ந்து நிறுவியசீர்—விஞ்சுதமிழ்ச்
சங்கந் தழைத்துத் தனதிருபான் மூன்ருண்டு
துங்க முடனிறைந்து தோன்றுமிந்நாள்—எங்கணுந்தன்
செங்கோல் விளங்கச் செகம்புரக்குஞ் சேதுபதி
யெங்கோன் இராஜரா ஜேச்வரவேள்—கொங்காரு
முல்லையந் தாரான் முகவை நகரதிபன்
இல்லையெனக் கூரு வியற்கொடையான்—எல்லையில்சீர்
மன்னு தமிழ்ச்சங்க மன்னவனிவ் வற்சரத்தின்
நன்னர் திருநாள் நடாத்துவான்—முன்னி
நிதிசேர் வடநாட்டு நீணிதிக்கோ னெனனத்
துதிசேர் குலத்துதித்த தூயோன்—பதியால்

விளங்குசென்னை மாகாண வித்தை வகைக்கு
வளங்குலவு மந்திரியாய் வந்திங்—கிளம்பிறைபோல்
வையமெலாங் கல்வி வளரும் வகைக்கேற்ற
செய்யசட்ட திட்டமதுஞ் செய்தளிப்போன்—மெய்தவிரான்
ஞாலம் புகழ்பரசு ராமதாஸ் பாத்ரோவாஞ்
சீலம் பிறழாத் திறலோனைச்—சாலுமுயர்
அக்ரா சனாதிபதி யாக வெனவேண்ட
இக்கோமா னுள்ள மிசைந்தருளித்—தக்கோர்
மிகுசபைக்கு நாயகமா வீற்றிருப்பான் வந்தான்
தகுநந் தமிழ்க்கிசைந்த சால்பே—நகுவெள்ளி
வேதண்டத் தானும் வியன்சார்ங்க மென்னுமெழிற்
கோதண்டத் தானுங் குழைந்ததமிழ்—மூதண்ட
மெங்கும் பரந்ததமி ழீறிலா நந்தமிழை
யிங்கோர் தனிமொழியன் றென்னுமல்—மங்காத
ஆந்திர நாட்டா ரரிய தமதுமொழி
ஏந்து தனித்தலைமை யெய்தும்வகை—ஓர்ந்தே
சருவகலா சங்கந் தனையமைக்கு மாபோற்
சருவகலா சங்கந் தமிழ்க்கும்—மருவும்வகை
செய்துநந் தேசஞ் சிறக்க நலமருள்வான்
எய்தும் வரவிங் கினிதாக—மொய்தமிழும்
சங்கமுஞ் சங்கத் தனித்தலைமை பூண்டோரும்
பொங்கு சபைநிறைந்த புண்ணியரும்—மங்குலென
நற்றமிழ்ச் சங்கம் நலந்தழைக்க வாதரிக்குங்
குற்றமிலா வண்மைக் குணத்தோரும்—மற்றவரும்
ஊழிதோ றூழி யொருமுதல்வன் றன்னருளால்
வாழி யுலகின் மகிழ்ந்து.

சக்கரவர்த்தி வாழ்த்து.

திங்கள்வெண் கொற்றச் செழுங்குடைக்கீழ் வையமெலாந்
தங்கப் புரக்குமைந்தாஞ் ஜார்ஜுமன்னும்—நங்கோமான்
செங்கோலு மன்னேன் றிருமாபும் வாழ்கவிவண்
எங்கோ னருளா லினிது.

நாகபட்டினம் ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ

V. முத்துஸ்வாமி ஐயரவர்கள், M.A., L.T.,

பாடியது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்த்திநனிகுலவியொளிர்சென்னைமாகாணத்திற்சிறப்பால்மாந்தர்
நேத்திரமாப்போற்றற்காங்கலைத்துறையின் றிருவாகவிலைமைபூணப்
பாத்திரமாப்போந்துயரும்மந்திரநற்பதவியுறும்பரசுராம
பாத்திர! தென்கலைமதுரைத்தமிழ்ச்சங்கவிழாத்தலைமைபரிந்தேற்பாயே.

மூந்துபுகழ்த்தமிழ்நாட்டுமுடிமன்னர்காத்தளித்தமுறையேபோலெம்
சிந்தையொடுசேதுவண்சிங்காதனஞ்சார் இராசராசேசமன்னன்
சொந்தமுறப்பாலனஞ்செய்தமிழ்ச்சங்கம்இத்தினத்திற்சூழ்ச்சிமிக்க
மந்திரி! நின்பாலனமும்வாய்ந்தபெரும்பேறுவந்துமதிக்கின்றோமால்.

உச்சையினிபுரங்கலிங்கம்ஓரங்கல்ஆதியசேண்ஊரும்பேரும்
மெச்சுதமிழ்த்திறம்"உரியன்"எனுமுன்னைவயப்படுத்தல்வியப்போ? அன்றி
இச்சைமிகச்சருவகலாசாலைமுதற்சிறூர்பள்ளிசூழ்எங்கும்
விச்சைதிருத்தமைச்சுநீதமிழ்ச்சங்கமுறல்வியப்போ?விள்ளுவாயே.

வந்துறுபன்மாணவரைப்பண்டிதராமாற்றியவர்வாயிலானும்
சொந்தமுள'செந்தமிழ்'ப்பத்திரத்தானும்வேறுபிரசுரங்களானும்
சந்தமுறத்தமிழ்வளர்க்கும்சங்கமிதற்காக்கநலம்சாரும்வண்ணம்
மந்திரியாவந்துறையும்மதியாள! துதியாளவகைசெய்வாயே.

வாழியசெந்தமிழ்நாடுவாழியசெந்தமிழ்ப்பாஷைவளமிக்கோங்கி
வாழியசெந்தமிழ்ச்சங்கம்மன்சேதுபதிவாழிவளர்திங்கள்போல்
வாழியஅக்ராசனமந்திரிப்பெருமானமற்றைபபிமானசிலர்
வாழியநம்ஜார்ஜரசும்வையகமும்சொக்கருள்மாண்பால்வாழி.

ஸ்ரீ

மதுரை அமெரிக்கன் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்

ஸ்ரீமத் S. I. ராமநாதசாஸ்திகள் இயற்றியது.

அத்யக்ஷபதவிராஜமாந ஆந்த்ரவிஶ்வகலாபரிஷத்ஸ்ய

த்ரயோவிம்ஶவர்ஷப்ராப்தவேஸஹாய திவ்யமஹோத்ஸவபூதாம்

மத்ராஸ் ஸம்ஸ்தாநராஜகீயவித்யாவிஹார மந்த்ரிணாம்

ஸ்ரீமதாம் **Hon. Sir. A. P. Patro** இத்யுபாஹ்வாநாம்.

ஸ்தோமபத்ரிகா

வாக்தேவீநயநாயமாநஜயார ஸ்ரீஆந்த்ரவிஶ்வஜயே, மாந்யம் ஆந்த்ரவிஶ்வவிதாநாயககலாஸ்தாநம் விராஜஸ்தாபிதம், ப்ராசீநைரப்யுதிவஶப்ரபம்பரவநாவிவர்தநவிதுஷைர:, ஸ்வாவேஷ்டஸ்தித்வஜயார்யாவர்தவிஜயதே ஸ்ரீஸேதுஹிமவா ஸ்ரீதம் ॥

ஸ்வஸ்திவர்ஷமஹோத்ஸவேமஹோத்ஸவமதி தேநி வெர்யாஜார யக்ஷதா-, மாஹாத்மிதாநிதராம்வரஹர்ஷமநஸா ஸ்ரீஸே தாநாயேநய:, ‘பாத்ரோ’ இத்யுதிவிஶ்ருத:பரமா ஶேத்யாவஸ்யாமோதிதோ, மத்ராஸ்ஸமஸ்தீவிஹாரமஸசிவ: ஸ்ரீமாந்ஸஜேஜீயதே ॥.

தஸ்யைஸ்வப்ரகமாதிவ்யவிஷயே தீக்ஷாவதே யீம தே, காவ்யம்தீவரிஷஜ ஸமாமதவதேவீதா மஹா: ஸ்தோமதம் |, ஸ்ரீமாந்தஃவர்ஷோத்ஸவோமஹோத்ஸவக்ருவயாம ரோமஶ்சிராயார்யபுஷ: விஷ்ணுப்ரவர்ணாம்ப்ரியம்ஸவித ரேஜிதேவமாமம்ஸதே ॥.

வயபூதாம் பாரதீ ஸவப்ர ஸம்ஸ்க்ருத ஆந்த்ரமாதா |

‘பாத்ரோ’ இத்யுதிய: ஸ்ரீமாந் ராஜதாம் ஶரதாம்ஶதம் ॥

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(உ௫௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

179. ஆறெலாம் கங்கையே ஆய; ஆழிதாம்
கூறு பாற் கடலையே ஒத்த; குன்றெலாம்
ஈறிலான் கயிலையை இயைந்த; என் இனி
வேறு யாம் புகல்வது நிலவின் வீக்கமே?

இ - ள். (சந்திரிகை தம்மேற் பாவப்பெற்று வெண்ணிறம் அடைந்ததனால்) எல்லா ஆறுகளும் (இயல்பாக வெண்மையான) கங்காநதிபோன்றன; கடல்களெல்லாம் பாற்கடல் நேர்ந்தன; மலைகள் யாவையும் வெள்ளிமலையொத்தன: (இவ்வாறு கூறுவதன்றி) நிலாப்பெருக்கத்தை (ப்பற்றி) இனி நாம் வேறு கூறத்தக்கது யாது (உளது)? (ஒன்றும் இல்லை).

ஆய - ஒத்தன. 'செம்மாந்த தெங்கின் இளநீரை ஓர் செம்மல் நோக்கி - அம்மா இவை மங்கையர் கொங்கைகள் ஆகும் என்ன' (பூக்கொய் படலம் கஎ) என்பதில் 'ஆதல்' 'ஒத்தல்' என்ற பொருள்பட வருதல் காண்க. கூறு - (மற்றைக் கடல்களினுஞ் சிறந்ததாகக்) கூறப்பட்ட. இயைந்த - ஒத்தன. என் - யாது. வீக்கம்-மிகுதி, (வீங்குதல் - மிகுதல் புறநானூறு) பெருமை (சிந்தாமணி).

'கங்கையே' 'கடலையே' என்பவற்றில்வரும் 'ஏ' "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ?" என்பதில் உள்ள 'ஏ' போல உயர்வுசிறப்புப்பொருள் தந்து நின்றது. அந்த 'ஏ' கயிலையை என் பதன்பின் தொக்குநின்றது.

சாமானியமான ஆறுகளைச் சங்கரன் சடையில் தரித்த மகிமையுடைய கங்கையாறாகவும், சாதாரணமான கடல்களைத் திருமால் பள்ளிகொள்ளும் சீர்படைத்த பாற்கடலாகவும், பல இடங்களிலும் காணப்படும் மலைகளை ஈசன் வாழும் மகத்துவம் மிகுத்த கைலைமலையாகவும் செய்து வெண்ணிறமும் சிவபெருமான் திருமுடிமேல் விளங்கும் சந்திரனது ஒளியாம் பெருமையும் உடைய சந்திரிகையானது, தான் சார்ந்த பொருள்களைத் தன்னைப்போல் வெண்மையும் மேன்மையும் அடையச் செய்ததென்று பொருள் விரித்துரைக்கலாம். நிலவு பரவப்பெற்ற கருங்

கடல் கரியமலை முதலியன வெண்ணிறமடைந்தனவென்பது "உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத் தோடி—இருண்ட கல்லையும் பொன்னிற மாக்கிய இரதம்" (சந்திரசைலப்படலம் அ) என்பதனோடு ஒப்பிடற்குரியது.

[மாதர்கள், முத்துப் பந்தலிலும், பூம்பந்தலிலும், கூடாரங்களிலும், தாம் நீராடிவிட்டு நீங்கிய தடாகங்கள்போன்ற பளிங்குப்பாறைகளிலும் சென்று தங்கிப், பூவிலே தேனை வார்த்தாற்போல வாயிலே கள்ளை ஊற்றி உண்பாராயினர்.]

180. உக்க பால் புரை நிலா உண்ட வள்ளமும்
கைக்கொள்வாள் ஒளி படச் சிவந்து காட்டத், தன்
மைக் கணும் சிவந்த(து,) ஓர் மடந்தை ; வாய் வழிப்
புக்க தேன் அமிழ்தமாய்ப் பொலிந்த போன்றவே.

இ. ள். சிந்தி(ப்பரவி)ய பால்போன்ற. (பரந்த வெண்மையான) நிலாப் பொருந்திய (தனால் வெளுத்திருந்த செம்பொற்) கிண்ணமானது, (அதனை, அதனிலிருந்த கள்ளையுண்ட) ஒருமாது கையால் எடுப்ப, (எடுத்த) வளது (செங்கை) ஒளிபடச் சிவந்து தோன்ற, (கள்ளுண்ட காரணத்தால் அவளுடைய) கருங்கண் சிவந்தது ; (அதே காரணத்தால் வெளுத்திருந்த) வாயிலே (அவள் உண்ணும்படி ஊற்றப்) புகுந்த (செங்) தேன் (வெண்மையான) அமிழ்தமாய்விளங்கியது போன்றது.

உக்க—சிந்திய. புரை—ஒத்த. உண்ட—பொருந்திய (சங்க அகராதி) 'பொலிந்த', 'போன்ற' என்பவை துவ்விகுதி தொக்குநின்றன. "வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்" (திருஅவதாரப்படலம்-கஉ) 'பூதகணத் தாசேந்தி அனல் நின்றும் புறப்பட்ட" என்பவைகளில் 'வருவ' 'புறப்பட்ட' என்பன துவ்விகுதி தொக்குநின்றதைக் காண்க. உம்மைகள் இசைநிறை.

[ஓமாக்கினி உள்ளே உள்ள ஓமகுண்டத்தின் வாயில் ஊற்றும் நெய் ஓமாக்கினியை ஓங்கி வளரச் செய்தல் போல, காமாக்கினி உள்ளே உள்ள மாதர் வாயில் வார்த்த கள், காமாக்கினியைக் கதித்துப் பெருகச் செய்தது.

கள்ளுண்டு அறிவுமயங்கியதனாலோ, மாதர்க்கியற்கையாகவுள்ள பேதமையினாலோ, ஒருமாது, கள்வார்த்தகிண்ணத்திலே தன்வடிவைக் கண்டு "தோழியே! என்னுடன் கள்ளுண்பாயாக" என்றாள்;

மற்றொருமாது, தன்முகத்தைக் கள் வள்ளத்திலே கண்டு "பைத்தியக்காரி! யாது செய்தாய்! வேறு நிரம்பக் கள்ளிருக்க, எச்சிற் கள்ளை உண்ணுகின்றாயே!" என்றாள்;

வேறொருமாது, கள்வட்டிலிலே சந்திரிகை பாய்ந்து கள் நிறைந்ததுபோலத் தோன்றக்கண்டு உண்ணுதற்கு வாய் வைக்கவே, பக்கத்தில் நின்றோர் பார்த்துப் பரிகசிக்க, வெட்கமுற்றாள்;

பிறிதொருமாது, தன் கண்ணின் நிழல் கள்ளிலே தோன்ற வண்டென்று ஓட்டலுற்றாள்;

ஏனை ஒருமாது, தான் இருந்த பூம்பந்தரின் விதானத்தில் உள்ள துளைகள்வழியாகஒழுகும் நிலாவைக் கள்ளென்று வள்ளத்தில் ஏற்றாள்;

இன்னும் ஒருமாது, கள்ளுச் சாடியுள்ளே சந்திர பிம்பத்தைக் கண்டு "சந்திரா! நீ வானத்திலுள்ள இராகுவென்னும் பாம்புக்குப் பயந்து இங்கு வந்து ஒளித்தாய் போலும். பயப்படாதே; அபயம் அளித்தேன்" என்றாள்;

பின்னும் ஒருமாது, கள் வள்ளத்துள்ளே தன் முகத்தைக்கண்டு, கள்ளுண்ணும் ஆசையால் சந்திரன் அவ்வள்ளத்துள் விழுந்தானென்று எண்ணி "யான் என் கணவனோடு ஊடும் நாள்களில் நீ கொதிமதியாகாமல் குளிர்மதியாவாயானால், யான் உனக்குக் கள் உண்ணக் கொடுப்பேன்" என்றாள்;

பெயர்த்தும் ஒருமாது பூமாலையை அரையிலும் பொன்மாலையைக் கூந்தலிலும் சுற்றினாள்;

இவ்வாறு அறிவு மயங்கியமாதர் செயல்கள் ஆக, அறிவு மயங்காத மாதொருத்தி, தன் உள்ளத்தில் உறைகின்ற கணவன் கள்ளுண்ணாதவனென்பதை நினைந்து, அவன் உள்ள உள்ளத்தில் கள் உண்ண எண்ணும் எண்ணத்துக்கும் இடங்கொடுத்தலாகாதென்று, கள் உண்ணலை எண்ணலும் செய்யாது விலக்கினாள்.

ஒரு மாது, தன் காதலைத் தன் கணவனுக்குத் தெரிவிக்கும்படி தோழியைத் தூதனுப்புகின்றவள், "தோழீ! என் நெஞ்சைத் தூது விட்டேன். அது அவரிடமே தங்கி வாராமல் தாழ்த்தது: அதுபோல நீயும் தாமதித்துவிடுவாயோ? திரும்பிவருவாயோ?" என்றாள்.

ஒருபேதை, தன் தோழியரெல்லாரையும் ஒருத்திபின் ஒருத்தியாகத் தன் நாயகன்பால் தூதனுப்பிவிட்டு, அவர்கள்பின் தானும் தனியளாய்ச் சென்றாள்.

ஒருகோதை, சயனத்திலே தன்னோடிருந்த கொழுநனோடு ஊடினாள்; பின்பு அவள் ஊடல் நீங்க எண்ணங்கொண்டாள். அந்தக் குறிப்பை அவன் அறியாதிருந்தான்: ஆகவே, பேசாதிருந்த தான் வலிந்து பேசுவதை மறைக்க, சோம்பல் விடுவாள்போன்று, கைகால்களை நிமிர்த்துக் கொட்டாவிவிட்டுக்கொண்டு "எத்தனை நாழிகை கழிந்தன?" என்று கேட்டாள்.

ஒரு பாவை புலவி செய்தாள்; அதனை அவள் காமம் நீக்கி அதிகப்பட, அதனைத் தீர்த்தற்கு அவள் பொய்யுறக்கம் உறங்கிக் கனவு கண்டு பயந்தவள்போலக் காந்தனைக் கட்டிக்கொண்டாள்.

ஒரு பூவை, தான் செல்வது பிறாறியாதபடி சதங்கை முதலிய ஒலி செய்யும் ஆபரணங்களைக் கழற்றி வைத்துவிட்டுத் தன் புருடனிருக்கு மிடத்துக்குப் புறப்பட்டாள். அப்போது சந்திரன் தோன்ற, அது தன்னை வெளிப்படுத்தித் தான் கரந்து செல்லுதற்குத் தடையாயினதென்று கடுமையாகக் கோபித்து அதனைத் தீத்துவிடுவாள் போலப் பார்த்தாள்.

ஒரு நங்கை, தான் காமனால் வருந்துவதைச் சொல்லக் கருதி, அவன் உருவம் உள்ள படத்தைப் பார்த்தது த்தோழியை நோக்கினாள். அதனால் அவள் காமநோயுற்றதைத் தோழி ஊகித்துணர்ந்து, அந்நோயைத் தீர்க்க அவள் காதலனை அழைத்துவரப் புறப்படுவாளாகி அவன் இருந்த திசையை நோக்கினாள்; அந்நோக்கின் குறிப்புணர்ந்து தன் நோக்கின் சமிக்கையால் அந்நங்கை விடையளித்தாள்.)

ஒருமங்கை, தன் மணவாளனுள்ள இடத்துக்குச் செல்வாளானாள்: அவளையழைத்துச்சென்றதூது, மதுவோ, மதியோ, மன்மதனோ? தெரியேம்.

ஒரு மடந்தை தன் கேள்வன்மீது கொண்ட கோபமும் மோகமும் ஒன்றோடொன்று போராட, கோபம் தோற்றோட, கோபத்தைச் செலுத்தற்கிடமில்லாது போயிற்றேயென்று நாணிக் கண்ணீர்விட, அது கண்ட அவன் "யாது நேர்ந்தது!" என்று நகைக்கத், தானும் நகைத்து நாணம் விடுத்தாள்.]

(தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

ஆசிரியர் நல்லந்துவனார்காலம்.

(௲௧௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிள்ளையவர்கள்முடிபுகளிற் பன்னிரண்டாவதாகிய பரிபாடல் உரையாசிரியர் பரிமேலழகரோ அன்றோ என்னும் ஐயத்தை நீக்கிக் கொண்டு மற்றவைகளைப் பின்னர் ஆராய்வோம்.

முதலாவதாக, பரிபாடற் பதிப்பின் ஈற்றிற்காட்டப்பட்டிருக்கும் உரைச்சிறப்புப்பாயிரமொன்றே பரிபாட்டுரையாசிரியர் பரிமேலழகர் என்பதற்குப் போதியசான்றும். அது,

“கண்ணுதற் கடவு ளண்ணலங் குறுமுனி
முனைவேன் முருக னெனவிவர் முதலிய
திருந்துமொழிப் புலவ ரருந்தமி ழாய்ந்த
சங்க மென்னுந் துங்கமலி கடலு
ளரிதி னெழுந்த பரிபாட் டமுத
மாசுநிலை திரீஇய வளப்பருங் காலங்
கோதில் சொன்மக ளோதைகக் கிடத்தலிற்
பாடிய சான்றவர் பீடுநன் குணரா
மிகைபடு பொருளை நகைபடு புன்சொலிற்
றந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பு
மெழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பு
மொருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடந்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் றகைப்பு விதியுளி யகற்றி
யெல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய
வணிதிகழ் பாடத் தணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டின
னீணிலங் கடந்தோன் றொழு மரபிற்
பரிமே லழக னுரிமையி னுணர்ந்தே”

என்பதாம்.

இதன் செம்பொருளாவது:-ஆலவாயெம்பெருமானென அவிர்சடைக் கடவுள், தவம் காட்சி முதலியவற்றிற் பெரியோனும் உடலிற் சிறியோனான அகத்தியமுனிவன், குறிஞ்சிநிலத்தெய்வமாகிய கூர்மைபொருந்திய வேலையுடையமுருகனென் றின்னோரன்னபெரியார்கூடித் தமிழையாய்ந்த சங்கமென்னுங் கடலிலே எழுந்த அமுதமாகிய பரிபாட்டினை, தன் புன்சொற்களை இடைமடுத்துக் கந்தி என்ற நகைமொழிபெற்ற புல்லறிவாளனது இடைச்செருகலையும், செல்லரித்த புள்ளியல்லாமல் மெய்யொற்றும் புள்ளி முதலியவின்றி ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழைகளையும், மற்றையோரால் நேர்ந்த வழுக்களையுங் களைந்து கற்றோர்க்குக் கேட்குந்தோறும் கேட்குந்தோறும் இன்பமும் மகிழ்ச்சியுமுண்டாகும்படி ஐயந்திரிபுகளைநீக்கி இதுதான் சுத்தமான பாடமென்று காட்டினதோடு, சுருங்கிய உரையால் விளங்கவைத்தனன்; நீணிலங்கடந்த நெடுமுடியண்ணலை வழிபடுவோனாகிய பரிமேலழகனென்னும் புலவன் என்பது.

தமிழபிமானிகட்கு இக்கரியோன்றுமே போதுமாயினும், தற்கால ஆங்கிலக்கல்வியாளர்க்கு ஒருசான்று போதியதல்லவாகையாற், பின்னுஞ் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம். திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்களுட் டலைமைபெற்றார் பரிமேலழகரென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டதொருசெய்தியாம். இதனை யொருபுலவர்,

> "தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறளில்
> உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
> தத்துவமெல்லா முடம்பிற் றந்துணர்வார் போலுலக
> மொத்தபரி மேலழக னோர்ந்து"

என்று பாடியுள்ளார். இதனாலே இவருக்குத் திருக்குற ளுரையாசிரியரென வொரு சிறப்புப்பெய ரெய்தியது. பிற்காலத்தவரான புலவர் பெருமானொருவர் திருக்குறளிற் காணப்படும் அருந்தொடர்களுக்குத் திருக்குறள் நுண்பொருண்மாலை என ஒரு உரை யெழுதிப் போந்தார். அவர் ஆசிரியர் பரிமேலழகர் பரிபாடற்கு உரையெழுதியதைப் பலவிடங்களிற் சுட்டுகின்றார். அவற்றுட் சில வருமாறு:—

i. "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" (380)

என்னுங் குறள்வெண்பாவில் பெருவலி—என்ற தொடரை எடுத்துக்கொண்டு "பெருவலி—பெருவலியையுடையன; பண்புத்தொகைப்புறத்து

வந்த ஆகுபெயரென்னாது ஆகுபெயரென்றார்; 'பாயிரும்பனிக்கடல்'என்னும்(5-ம்)பரிபாட்டினுள், கயந்தலைக்கும் (பரி.பக். 33) பண்புத்தொகைப்புறத்துவந்த அன்மொழி; ஈண்டு ஆகுபெயரென்றார் இவ்வுரையாசிரியர்". (பரிமேலழகர்).

ii "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு" (231)

என்னுங் குறள்வெண்பாவில் பட என்பதற்கு உண்டாக வென்று பொருள் கூறியதைச் சுட்டி "இனி இவ்வுரையாசிரியர் பரிபாட்டினுள் "இலம்படுப்புலவ ரேற்றகை நிறைமாப், பொலஞ் சொரி வழுதி" (பரி 10 வரி 126-127) என்பதற்குத் தொல்காப்பியத்துள் "இலமென்கிளவிக்கு" என்னுஞ் சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரைத்தாங் குரைத்தார்". என்றார். ['இலம்படு-இன்மையாற்பற்றப்பட்ட' எனப் பொருள்கண்டார்].

iii. "சீரிடமென்பதற்கு (திருக்குறள் 821) வாய்த்த இடமென இறந்தகால வினைத் தொகையாமெனப் பொருள்கூறி 'புகர்வரிவண்டு' (பரி 22 வரி 39) என்னும் இப்பகுதியை எடுத்துக்காட்டிப் புகர்த்த வரிவண்டெனப் பொருளும் எழுதினர்" என்றார்.

இதுபோன்று காணப்படும் சான்றுகள் பலவிருப்பினும் இவை போதுமாகையான் இவ்வளவோடு நிறுத்தி மற்றுமொரு புறச்சான்று காட்டுவேன். ஐந்தாம்பரிபாடல்மாத்திரம் தனிப்படஎழுதியவொன்றில் "இந்தப்பாட்டிற்கெல்லாம் பரிமேலழகரையனுரையாற் பொருளுணர்ந்து கொள்க" என்று எழுதப்பட்டிருப்பதையும் (பரி : பக். 38) பரிபாடற் பதிப்பாசிரியர் பதித்திருப்பது சிறந்த சான்றுகளுள் ஒன்றாக மதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிற் கூறியதுகொண்டு இப்பரிபாட்டுரையாசிரியர் பரிமேலழகர்தானென்று யாதொரு ஐயமுமின்றிக் கொள்ளலாம். உரையாசிரியர் பரிமேலழகராகவே, அவரைப்பற்றிக் காலவாராய்ச்சியாளர் "In this case the Commentator himself an ancient classical author PARIMELALÁGAR whose Commentary on Tiruvalluvar's Tirukkural is well known and enjoys the reputation of being thoroughly reliable in literary matters and he may be presumed to be no less so in Astronomical

matters"* என்று கூறுவதால் உரையாசிரியர் உரை பழுதுடையதன்றென்பது இவர்கட்கும் ஒப்பமுடிந்ததென்பது போந்தபொருளாம்.

இனி இரண்டாவதாகிய "சிம்மத்திற் சூரியனிருக்கவேண்டுமென்பது உரையாசிரியர் ஊக"மென்பதையும்; மூன்றாவதான (இதற்காதாரம்) 'அங்கியுயர்நிற்ப'என்பதையும்; பதினைந்தாவதான 'நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருப்பதாகக் கூறவில்லை' என்பதையும் ஆராய்வோம். இதற்காதாரமான பரிபாடற்பகுதி வருமாறு:—

"விரிகதிர் மதியமொடு வியல்விசும்பு புணர்ப்ப
வெரிசடை யெழில்வேழந் தலையெனக் கீழிருந்து
தெருவிடைப் படுத்தமூன் றொன்பதிற் றிருக்கையு
ளுருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடிய
லங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவி
னில்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் பொல்லை
மதிய மறைய வருநாளில்"

"ஆரல் அங்கியே பாகுலம் அழல் அறுமீன் கார்த்திகை" என்பதனாலே அங்கி கார்த்திகை யெனப் பொருள்கண்டார். ஒவ்வொருமாதத்திலும் பொழுதுபடும்பொழுதும், புலரும்பொழுதும் இன்னின்னஉடுக்கள் வானத்தின்உச்சியிற் றோன்று மென்றிருக்கும் குறிப்பின்படி ஆவணி மாதத்திற் புலர்விடியலிற் றோன்றுவது கார்த்திகையாம். இது இன்றும் காணக்கூடிய வொரு காட்சியாகும். 'புலர்விடியல் அங்கிஉயர் நிற்ப'வென்றதால் இது ஆவணிமாதமென்றும், ஆவணியாகவே சூரியன் சிங்கவோரையில் இருக்கிறானென்றும் குறித்தார். ஆதித்தனைக் குறிப்பதற்காகவே அவர் அங்கியைக் குறித்தார். முதலில் இடபத்திலுள்ள கோளையும், பின் மேடத்திலுள்ள கோளையும், அடுத்து மிதுனத்துள்ள கோளையும் கூறியபிறகு சொல்லவேண்டியது அடுத்த ஓரையிலுள்ளதையன்றோ. கடகத்திற் கோளில்லையாகவே சிங்கத்திலுள்ள சூரியனைக் கூறுவான் 'புலர்விடியல் அங்கி உயர்நிற்ப' என்றார். இவ்வாடிமாதம்

* இதன் தமிழ்மொழிபெயர்ப்பு செந்தமிழ்த்தொகுதி உ௨ பக். ௩0இல் 248-வது பாராவின் ii-வது பிரிவில் காட்டப்பட்டது.

15-ம்தேதியிற் படுசுடர் அமையத்துச் சோதி விசாகமும், புலர்விடிய லில் அசுவதியும் உச்சத்திலிருக்கக் காண்கிறோம். ஆவணிமாத முற் பகுதியில் கார்த்திகை புலர்விடியலில் உயர்நிற்கக் காண்கிறோம். இதை இவ்வாறு கூறும் நூல்களும் முற்காலத்து இருந்திருத்தல்வேண்டும். ஆங்கிலத்தில் The Heavens, The Midnight Sky என்ற நூல்களில் இவ்விதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்றே தமிழிலும் இருந்திருக்கவேண்டும். இப்பொழுது அவ்விதநூல் நமக்குப் புலப் படுவதில்லையாயிற்று. இதனாற்றான் உரையாசிரியரும் "ஆதித்தன் சீயத்தையடைய வென்பார் புலர்விடியல் அங்கி உயர்நிற்ப" என்று பொருள் கூறினர். இதிலுள்ள என்பார் என்பது நூலாசிரியரான நல்லந்துவனாரைச் சுட்டாநின்றது. இனி உயர் என்பது உச்சி என் றும் மேல் என்றும் பொருள்படுமென்றார்கள். இம்மொழிக்கு இவ் விரண்டுபொருள்களும் பொருந்துமாயினும் பிள்ளையவர்கள் கொள் கைக்குக் கார்த்திகை தோன்ற என்றாவது என்ற பொருளிலாவது வரவேண்டும். சூன்மத்தியில் இவ்வுடுக்கூட்டம் தோன்றுதென்பது இவர்களறிந்தவிடயமேயாம். காணப்படாத காணமுடியாத ஒன்றைமேல் என்று எப்படிக் கொள்வது. வானகபாலத்திற் (Horizon) றென்றி 90 பாகை வந்தபொழுதன்றோ மேல் என்று கூறலாம். தோன்றுதபொழுது எவ்வாறு மேல் என்று கொள்வது. ஆகவே உயர்நிற்ப என்பதற்கு உச்சமாக என்று கொண்ட பொருளே அமைவுடைத்து.

இன்னும், ஆதித்தன் சீயத்திலிருக்கின்றான் என்று நூலாசிரியர் அழுத்தமாகக் கூறியுள்ளார் என்று மற்றொரு செய்தியாலும் பெறு வதைக் காட்டுவேன். சநி மகரத்தைபடையப் பாம்பாகிய இராகு மதி யத்தை மறைக்கின்றநாளிலே என்றார். இதனால் சநி சந்திரன் இரு வரும் மகரத்தில்நிற்க என்பது பெறுகின்றாம். இவ்வாறு பொரு ளில்லையாயின் இதுவரை ஒவ்வொரு கோளுக்கும் அதது நின்ற இராசி யைக் கூறிவந்தவர் இச்சநிக்கும் சந்திரனுக்கும் கூறியிருக்கவேண்டும். கூறியது சநிக்காயின் சந்திரனுக்கு ஒன்றவேண்டும். இதற்காக இவற் றின்பின்னர்நிற்கும் குருவைக்கூறி இவர்கள் இருவரும் ஒரு ராசியில் நிற்கின்றனர் என்று சுட்ட மகரத்தை நடுநிலையாக வைத்தார். மேலும் சந்திரக்ரகணம் என்று கூறியதனாலே பூரணையும் அது அன்றுதொட்டு இன்றுகாறும் பிழைபடாது தோன்றும் அவிட்டநாளும் பெற்றாம்.

பூரணையும் அவிட்டமும் தோன்றுவது ஆவணிமாதமென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததே. அன்றி, மதிநிறைநாளில் சோமனை அரவு தீண்டுவதுண்மையின், சந்திரனினின்றும் 180 பாகைக்குமேல் சூரியனிற்பது இல்லையென்று காலவாராய்ச்சியாளரே கூறினராகலின், சூரியன் சிங்கத்தில் நின்றான் என்று வெள்ளிடை விலங்கலெனப் பெறுகின்றாம். உரையாசிரியரான பரிமேலழகரும் நூலிற்கண்ட சொற்களுக்கு உரையெழுதிச் சென்றாரேயொழியத் தம் மனப்போக்குப்படி உரைசொல்லும் இக்காலத்தார்போன்று அவர் கூறவேயில்லை. அதனாலன்றோ சிறப்புப்பாயிரமுடையார் துணிதருபொருளைச் சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன் என்றார். இது வரையிற் கூறியதுகொண்டு நூலாசிரியர் சூரியன் சிம்மத்திலிருந்தானென்று கூறியுள்ளாரென்பதும், உரையாசிரியர்கொள்கையொன்றுங் காணப்படவில்லையென்பதும், புலர்விடியலங்கியென்பதுமாத்திரங்கொண்டு இது துணியவேண்டுவதில்லையென்பதும் பெற்றாம்.

இனி, பதினன்காவதாகக்கண்ட 'வில்விற்கடைமகரம்' என்பதற்கு, சநி தனுசில் இருக்கவேண்டுமேயொழிய மகரத்தில்லை என்னுங் கூற்றை யாராய்வேன். 'இறையமன்வில்லிற்கடைமகரமேவ' என்பது நூல். அதற்கு ஆசிரியர் பரிமேலழகர் யமனைத் தமையனாகவுடைய சநி வில்லுக்குப்பின்னாகிய மகரத்தைச்சேர என்று பொருள் கூறியுள்ளார். இதைத்தவிர விசேஷவுரை ஒன்றும் எழுதவில்லை. பிள்ளையவர்கள் சநி தன்னோடு ஒற்றுமைப்படாததுகண்டு வில்லின் கடை என்று பிரித்துக் கொண்டார்கள். தனக்கு ஆதாரமாகச் சிமான் மாணிக்கநாயக்கரவர்களையுங் கூறினார்கள். நாயக்கரவர்கள் தனுசுக்கு அடுத்த மகரமென்று சொல்லவேண்டுமானால் விற்கு அடை மகர மென்று இருக்கவேண்டுமென்றும், வில்லிற்கடைமகர மேன்றிருப்பதாலே தனுசிலிருக்க என்றே பொருள்படும் என்றும் கூறியதாகச் சொல்லுகிறார்கள். முன்னொருக்கால் தாம் வெளியிட்ட இந்தியகாலகணிதம் (இண்டியன் கிரனலஜி Indian Chronology) என்னு நூலில் தினத்தியாச்சியத்தைப் பற்றி எழுதும்போது பஞ்சாங்கங்களில் கொடுக்கப்பட்டிருப்பவை இவ்வளவோடு முடிவடையுமென்று குறிக்கும் என்றும், இதுவும் வேறு சிலவும் திரிக்சித்தாந்தகணி ஸ்ரீமத் விசுவநாத சிரௌதி முதலாயினோருக்கும் சம்மதமென்றும் எழுதினார்கள். யான் அச்சிரௌதிகட்கு

எழுதிக்கேட்டபோது அவர்கள் Thyajyam only commences at the time given in the Almanacks. I am not responsible for Mr. L. D. S's statement என்றெழுதியுள்ளார்கள். பஞ்சாங்கங்களிற் காணப்படும் தியாச்சியகாலங்கள் அதன்மேல் மூன்றேமுக்கால் நாழிகை செலவுடையதென்பது உலகவழக்கு. காலப்பிரகாசிகை என்னும் சோதிடநூலின் சம்மதமும் அதுவே. இவ்விதமே எனது ஆப்தநண்பரும் பெருங்கணியும் வேதாங்க விற்பன்னருமான காலஞ்சென்ற திருவையாறு ஸ்ரீமாந்—சாமிநாத சாஸ்திரிகளும் தெரிவித்தார்கள். அஃதே போன்று எனதுநண்பர் ஸ்ரீமான் மாணிக்கநாய்க்கரவர்களும் சொல்லக்கூடுமென்றஞ்சுகிறேன். வில்விற்கடைமகரம் மேவ என்று கொண்டால் வில்விற்கு ஏற்பட்டுள்ள 30 பாகையிலே கடைப்பாகையான 30-வது பாகையிலிருந்து மகரத்தின் முதற்பாகை செல்லுகிறான் என்று பொருள் பயக்கவேண்டும். அதற்கு வாசகத்தைப் பிணைக்கக்கூடிய மொழிகள் சிலவேண்டும். வில்விற் கடை என்பதற்கு தனுசின் 30-வது பாகை என்று கொள்ளலாம். மகரமேவ என்பதற்கு மகரத்தில் பொருந்த என்ற பொருள் பயப்பதல்லது வேறுபொருள் பயவாது. மேவ-பொருந்த, சேர; ஆகவே அதற்கு ஒரு வேற்றுமையுருபு வேண்டும். இவ்வாறு வலிந்து பொருள்கொள்ளினும் தனுசிலிருந்தான் என்று பொருள் கொள்வதி யாங்ஙனம்? அன்றியும், அவன் மகரம் மேவ என்ற இரு மொழிகளும் வெண்டப்படாவாம். இத்துணை அருமையான ஒரு பாவிலே பயனில்சொற்களை ஆசிரியர் புகுத்தினர் என்ற குற்றம் பாரிக்க என் மனம் பதறுகின்றது. அன்றியும், வெற்றுச்சொற்களை மடுத்துப் பாட்டினழகினைக் கெடுப்பது பழந்தமிழ்ப்புலவர்கள்வழக்காறல்ல. குல்லாவுக்குத்தகுந்த தலைசெய்யும் வழக்கம் அந்நாளிலில்லை என்று திட்டமாகக் கூறலாம்.

இனி, உரையாசிரியர் கொண்டபடி வில்விற்கு அடை மகர மேவ என்று கொள்வதில் இப்பொழுது அடையும் துன்பங்கள் காண்பதில்லை. ஆயினும், விற்கடை என்று கூறாது வில்விற்கு என ஒரு இன்சாரியை சேர்த்தது என்னகருதி எனக் கடாயவழிப் பாட்டு இன்னோசை பெறுதற் பொருட்டு அச்சாரியையை ஆண்டுச் சேர்த்ததாமெனக. விற்கடை மகரமேவ, வில்விற்கடைமகரமேவ என்னுந் தொடர்மொழிகளைப் பல தரங்கூறி அவற்றது பெருமை சிறுமை அறிக. அன்றியும், முன்னர்ச்

சோமனும் மகரத்தில் நிற்கிறதைச் சுட்ட நடுவில் இச்சொல்லைப் பெய்துவைத்தார் என்று கூறியதையும் உற்றுநோக்குக. ஆகையால் வில்லிற்கு அடை மகரம் என்பதே பொருந்தும் என்பதும் சநி மகரத்திலே இருந்தான் என்பதும் இதனாற் பெற்றாம்.

மேல், பத்தாவதான உரையாசிரியரும் நம்மைப்போல் ஒருகாலத்தைக் குறிக்க முயன்றனரா (அது பதினோராவது கூற்றின்படி ஒற்றுமைப் படவில்லையா) வென்பதை ஆராய்வோம். உரையாசிரியர் இப்பாட்டிற்குக் கூறியுள்ளதெல்லாம் "நிறத்தையுடைய வெள்ளி இடபத்தைச்சேரச் செவ்வாய் மேடத்தைச்சேரப் புதன் மிதுனத்தைச்சேரக் கார்த்திகை உச்சமாக விடிதலுண்டாக, வியாழம் சனியின் இல்லமிரண்டாகிய மகர கும்பங்கட்கு உப்பாலை மீனத்தைச்சேர, யமனைத் தமையனாகவுடைய சனி வில்லுக்குப் பின்னாகிய மகரத்தைச்சேர இராகு மதியமறையும்படி வருநாளின்கண்" என்பதே. மேல் தொகுப்புரை, இதனாற் சொல்லியது, ஆவணித்திங்கள் அவிட்டநாளின் இக்கோள்கள் தமக்குரிய நிலமாகிய இவ்விராசிகளில் நிற்பச் சோமனை அரவுதீண்டவென்பதாயிற்று என்பதாம். இத்தொகுப்புரையாவது இக்காலத்து (Summing up) என்று ஆங்கிலவழக்கிலுள்ளபடியாகும். மேலேகூறியதில் யாண்டும் உரையாசிரியர் ஒரு காலத்தைக் குறிக்கமுயன்றதாக வென் சிற்றறிவுக் கெட்டவில்லை அன்றியும், இக்காலத்தைப்போல் அக்காலத்து இந்தியாவில் அதனிலும் தென்தேயத்தில் மேனாட்டு நாகரீகம்பரவித்தான் இந்தியர் எவற்றையும் பயின்றனர் என்னுங் கொள்கையில்லையென்பது தேற்றம். ஆகவே அவர்கட்குக் கலி இன்ன ஆண்டிற்றான் இது நிகழ்ந்ததென்று குறிக்கவேண்டிய அவசியமும் இலதாயிற்று. உரையாசிரியர் பின்னோர் இடர்ப்பாடுறாமல் செவ்விதிற் பொருளறியவேண்டி எழுதிவைத்தாரேயன்றிக் காலநிர்ணயஞ்செய்ய வந்தவரன்று. அவ்வாறு அவருக்கு அக்காலம் தோன்றியிருக்குமாயின், காலத்தைத் திட்டமாகக் கூறி அதற்குரிய ஆதாரங்களையுங் காட்டியிருப்பார். ஆகவே, அவர் ஒருகாலத்தையும் கூறவந்தவருமன்று. கூறியது தவறவுமில்லை.

[தொடரும்]

இலக்கணவிளக்க பரம்பரைத்,
திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகன்.

428. பிறர்புல மென்னார் தமர்புல மென்னார்
விறல்வெய்யோர் வீங்கிருட்கட் சென்றார்—நிறையுங்
கடாஅஞ் செருக்குங் கடுங்களி யானை
படாஅ முகம்படுத் தாங்கு.

429. [1]வெவ்வாண் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றார்—எவ்வாயும்
ஆர்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியோடு புக்கு.

வேய்.

430. ஒருவ ரொருவ ருணராமற் சென்றாங்
கிருவரு மொப்ப விசைந்தார்—வெருவா
வீக்குங் கழற்கால் விறல்வெய்யோர் வில்லோடு
கோக்குஞ் சரந்தெரிந்து கொண்டு.

புறத்திறை.

431. இருநில மருங்கி னெப்பிறப் பாயினும்
மருவின் மாலையோ வினிதே யிரவின்
ஆகோள் மள்ளரு மருள்வரக் கானத்து
நாம்புறத் திறுத்தன மாகத் தாந்தம்
கன்றுகுரல் கேட்டன போல
நின்றுசெவி [2]யோர்த்தன சென்றுபடு நிரையே.

வள்ளிக்கூத்து.

432. மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனுங் கண்களித்தான்—பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமக ளேற்றாள் பெரிது.

பூசன்மாற்று.

433. ஒத்த வயவ ரொருங்கவிய நாண்படாத்
தத்த மொலியுந் தவிர்ந்தன—வைத்தகன்றார்
தம்பூசன் மாற்றி நிரைகொள்வான் றாக்கினார்
வெம்பூசன் மாற்றிய வில்.

---

(428) பெரும்பொருள்வி (புறத்). தொல். பொரு. 58. நச். (429) பெரும்பொருள்வி. (புறத்). [1]வெவ்வாய். (430) தொல். பொரு. 58. (431) தகடூர் யாத்-தொல். பொரு. 58. [2]யேற்றன. (432) சிலப். 12, பக். 328; தொல். பொரு. 60. நச். (433). தொல். பொரு. 58.

தந்துநிறை.

434. குளிறு குரன்முரசங் கோட்டின் வெரூஉங்
களிற்றொடுதேர் காண்டலு மாற்றா—நளிமணி
நல்லா னினநிரை நம்மூர்ப் [1]பெருங்கானம்
எல்லாம் பெருக விடம்.

435. கழுவொடு பாகர் கலங்காமல் யாத்துத்
தொழுவிடை யாயந் தொகுமின்—எழுவொழித்தாற்
போமே யிவையிவற்றைப் போற்றுமின் புல்லொடுசீர்
தாமேய் புலம்போலத் தந்து.

வேய்கூறினர்க்குச் சிறப்பு.

436. மாற்றருந் துப்பின் வயவேந்த னல்லனே
எற்ற பெருஞ்சிறப் பின்றீதும்—வேற்றாரிற்
புல்வேய் குரம்பைப் புறஞ்சிறைவாய் நின்றொற்றி
நல்வே யுரைத்தார்க்கு நாம்.

கரந்தை.

படைத்தலைவர் படையாளரைக் கூயது.

437. கடிமனைச் சீறூர்க் கடுங்கட் கறவை
வடிநவின் மேலோன் மறுத்தோம்ப லொட்டான்
அடிபுனை தோளி னரண்சேர்ந்து மள்ளர்
வருகமன் வாயிற் கடை.

படைச்செருக்கு.

438. வாள்வலம் பெற்ற வயவேந்த னேவலாற்
றுள்வல் விளையவர் தாஞ்செல்வி—ஞாளைக்
கனைகுர னல்லாத்தன் கன்றுள்ளப் பாலால்
நனைவது போலுநம் மூர்.

ஊர்கொலை.

439. அரவூர் மதியிற் கரிதூர வீம
விரவூ ரெரிகொளீஇக் கொன்று—நிரைநின்ற
பல்லான் றொழுவும் பகற்றாண்மார் போர்கண்டோர்
கொல்வார்ப் பெறூஅர் கொதித்து.

(435—437) தொல். பொரு. 58. நச். [1]புறங்கானம். (438) தொல். ஷை, பெரும்பொருள்வி (புறத்). (439) தொல். பொரு. 58 மேற்.

440. சென்ற நிரைப்புறத்துச் சிறூர்த் தொடைகொண்டு
நின்ற மறவர் நிலஞ்சேர்ந்தார்—கொன்றூண்
டிகலிழந்த வல்வி லிளையோர்ப்ன் மரத்
துகளெழுங்கொல் பல்லான் றொழு.

நிரைமீட்சி.

441. அடியதி ரார்ப்பின ராபெயர்த்தற் கன்னுய்
கடிய மறவர் கதழ்ந்தார்—மடிநிரை
மீளாது மீளார் விறல்வெய்யோர் யாதாங்கொல்
வாளார் துடியர் வலம்.

442. கடல்புக்கு மண்ணெடுத்த காரேனக் கோட்டின்
மிடல்பெரி தெய்தின மாதோ—தொடலைக்
கரந்தை மறவர் [1]கருதார் குழாஅத்
துரந்து நிரைமீட்ட தோள்.

பூசன்மாற்று.

443. ஆவூ ரெறிந்து நிரையொடு பெயர்ந்த
வெட்சி மறவர் வீழவு முட்காது
கயிறியல் பாவை போல வயிறிரித்
துழைக்குரற் குணர்ந்த வளைப்புலி போல
முற்படு பூசல் கேட்டனர் பிற்பட
நிணமிசை யிழுக்காது தமர்பிண மிடறி
நிலங்கெடக் கிடந்த கருந்தலை நடுவண்
மாக்கட னெருப்புப் போல நோக்குபு
வெஞ்சிலை விடலை வீழ்ந்தனன்
அஞ்சுதக் கன்றூற் செஞ்சோற்று நிலையே.

நிரைமீட்டோர் வரவு.

444. காட்டகஞ் சென்றுயிர் போற்றான் கடுஞ்சுரையான்
மீட்ட மகனை வினவுறாள்—ஓட்டந்து
தன்னெதிர் தோன்றும் புனிற்றாத் தழீஇக்கலுழும்
[2]என்னதுயர் பட்டாயோ வென்று.

---

(440) தொல். பொரு. 58 மேற். (441) பெரும்பொருள்வி (புறத்). (442, 443) ஷ்ஷ்; தொல். பொரு. 58. மேற். [1]கருதாதாருள்ளம். (444) பெரும்பொருள்வி (புறத்). தொல். பொரு. 58. மேற். [2]என்னெதிர்ப்பட்டாயோ; என்னது பட்டாயோ.

445. கல்கெழு சீறூர்க் கடைகாண் விருப்பினன்
மெல்ல நடவா [1]விரையு நிரையென்னே
தெள்ளறற் கானியாற்றுத் தீநீர் பருகவும்
மள்ளர் நடவா வகை.

446. கங்கை பரந்தாங்குக் கானப் பெருங்கவலை
எங்கு மறவ ரிரைத்தெழுந்தார்—[2]தங்கிளைகண்
மன்றுகாண் வேட்கை [3]மடிசுரப்பத் தோன்றுவ
கன்றுகாண் [4]மெய்குளிர்வீர் கண்டு.

பாதீடு.

447. யாமே பகுத்திட வேண்டா வினநிரை
தாமே தமரை யறிந்தனகொல்—ஏமுற
அன்றீன்ற தம்மை யறிந்துகொள் கன்றேய்ப்பச்
சென்றீண்டு மாங்கவர்பாற் சென்று.

நிரைக்கோடை.

448. கொடைத்தொழி லெல்லாங் குறைவின்றிப் பண்டே
முடித்தன னென்றிருந்த மூத்தோன்—கொடைக்கு
வரம்பில னென்றே மருண்டா னிரைகோட்
கரந்தையங் கண்ணியாற் கண்டு.

உண்டாட்டு.

449. பகைவர் கொண்ட படுமணி யாயம்
மீட்டிவட் டந்த வாட்டிறற் குரிசின்
மூழவுத் துயின்மறந்த மூதூ ராங்கண்
விழவுத் தலைக்கொண்ட விளையாட் டாயத்
தூன்சுடு கொழும்புகைக் கருங்கொடி யும்பர்
மீன்சுடு புகையின் விசும்புவாய்த் தன்றே
கைவல் கம்மியர் பலகூட் டாரமொடு
நெய்பிழி நறுவிரை நிலம்பரந் தன்றே
காவிற் காவிற் கணங்கொள் வண்டெனப்
பூவிலை மகளிர் புலம்படர்ந் தனரே
சந்தியுஞ் சதுக்கமும் பந்தர் போகிய
வாடுறு நறவின் சாடி தோறும்
கொள்வினை மாற்றாக் கொடையொடு
கள்விலை யாட்டியுங் கைதூ வாளே.

---

(445) பெரும்பொருள்வி(புறத). தொல். ஷை. [1]விரையுநிரை-யொல்லென. (446) பெரும்பொருள்வி (புறத). [2]தங்கிளைக்கண். [3]மடிசீரப்ப வேதோன்றுங். [4]மெய்குளிர்ப்பீர். (447) ஷை; தொல். பொரு. 58 நச். (448-449) ஷை.

வஞ்சி.

வஞ்சியரவம்.

450. விண்ணசைஇச் செல்கின்ற வேலிளைய ரார்ப்பெடுப்ப
மண்ணசைஇச் செல்கின்றான் வாள்வேந்தன்—எண்ணம்
ஒருபாற் படர்தரக்கண் டொன்னார்த மூள்ளம்
இருபாற் படுவ தெவன்.

451. போர்ப்படை யார்ப்பப் பொடியா யெழுமரோ
பார்ப்புர வெண்ணான்கொல் பார்வேந்த—னூர்ப்புறத்து
நில்லாத தானை நிலனெளிய நீளிடைப்
புல்லார்மேற் செல்லும் பொழுது.

துணைவந்தபோது அரசர் விளக்கம்.

452. மேற்செல்லுங் காலத் துணைவந்த வேந்தர்தம்
பாற்செல்லச் செல்லும் பரிசினா—னற்கடல்சூழ்
மண்மகிழுங் காட்சியான் மீன்பூத்த வானத்து
வெண்மதிபோன் மேம்பட்டான் வேந்து.

கொற்றவஞ்சி.

453. நீணில [1]வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்றா ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
முனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே.

454. ஆளுங் கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து—நீள்குடையும்
வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து.

மாராயவஞ்சி.

455. போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றே—போர்க்கெல்லாந்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர்
வனாதிப் பட்டத் திவன்.

(450, 451) தொல். பொரு. 61; பெரும்பொருள்வி (புறத்). (452-453) ஷை. ஷை. ஷை. [1]வேந்தருடன்செல். (454) தண்டி. 54; வீரசோ. அலங். 25 மேற்; (455) தொல். பொரு. 63.

பெருஞ்சோற்றுநிலை.

456. உண்டியின் முந்தா னுடனுண்பான் றண்டேறல்
மண்டி வழங்கி வழீஇயதற்கோ—கொண்டி
மறவர் மறமிக் குயிர்நேர்ந்தார் மன்னர்க்
குறவிலர் கண்ணோடா தோர்ந்து.

தழிஞ்சி.

457. தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சியசீர்ப் பாசறை வேந்தன்—விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்.

கோடைவஞ்சி.

458. வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்துநர்க் கீதுமென் றெண்ணுமோ—பாத்தி
யுடைக்கலி மான்றே ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல.

சூடின நோச்சியைப் புகழ்ந்தது.

459. மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சி
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காத னன்மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
[1]தொடியணி மகளி ரல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.

உழிஞை.

அகத்தோன் செல்வம்.

460. பொருசின மாறுப் புலிப்போத் துறையும்
அருவரை கண்டார்போ லஞ்சி—யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வேந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து.

---

(456) தொல். பொரு. 63. (457) ஷை; பெரும்பொருள்வி (புறத்).
(458) தொல். பொரு. 63. நச். (459) ஷை. ஷை. 68. [1]தொடையுடை.
(460) ஷை. ஷை. 67; பெரும்பொருள்வி (புறத்).

461. மேலது வானத்து மூவா நகரும்
கீழது நாகர் நாடும் புடையன
திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
கொள்ளை சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
பல்வேறு விழுநிதி யெல்லா மவ்வழிக்
கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
தோலாத் துப்பிற் றுணிழல் வாழ்க்கை
வலம்படு மள்ளர்க்கு வீசி யிலங்கையில்
வாடா நொச்சி வகுத்தனன்
மாலை வெண்குடை யரக்கர் கோவே.

(பொன்முடியார் சோமானுக்குத் தகடூரின்தன்மை கூறியது).

462. மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப
எவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னூஅய்ப் பகைவர்
பைந்தலை துமித்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்ட றகாது வெந்துறை யானே.

அகத்தோன் குடைநாட்கோள்.

463. குன்றுயர் திங்கள்போற் கொற்றக் குடையொன்று
நின்றுயர் வாயிற் புறநிவப்ப—வொன்றார்
விளங்குருவப் பல்குடை விண்மீன்போற் றோன்றித்
துளங்கினவே தோற்றந் தொலைந்து.

அகத்தோன் வாணட்கோள்.

464. முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவா ணட்கொண்டான்—புற்றிழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வென்னுங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து.

(461) ஆசிரியமாலை (புறத்). (462) தொல். பொரு. 67 நச். (463, 464) ஷை. ஷை. 68; பெரும்பொருள்வி. (புறத்).

அகத்தோன் அகமிசைக்கிவர்தல்.

465. புற்றுறை பாம்பின் விடநோக்கம் போனோக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்—கொற்றவ
னெயின்மேற் றோன்றினா ரந்தாத்துக் கூடாத
போரெயின்மேல் வாழவுணர் போன்று.

அகத்தோர் ஏணி மயக்கம்.

466. இடையெழுவிற் போர்விலங்கும் யானையோர் போலும்
மடையமை யேணி மயக்கிற்—படையமைந்த
ஞாயில் பிணம்பிறக்கித் தூர்த்தார் நகரோர்க்கு
வாயி லெவனுங்கொன் மற்று.

அகத்தோன் பாசிமறம்.

467. தாந்தங் கடைதொறுஞ் சாய்ப்பவு மேல்விழுந்த
வேந்தன் படைப்பிணத்து வீழ்தலா—னங்கு
மதுக்கமழுந் தார்மன்னர்க் குள்ளூர் மறுகிற்
பதுக்கையும் வேண்டாதாம் பற்று.

அகத்தோன் முற்றிய முதிர்வு.

468. ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து—போர்மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
றாகஞ்சேர் தோள்கொட்டி யார்த்து.

அகத்தோன்தொகைநிலை.

469. தலைவன் மதில்சூழ்ந்த தார்வேந்தர்க் கொன்று
வலைவன் வலைசுருக்கி யாங்கு—நிலையிருந்த
தண்டத் தலைவர் தலைக்கூட வீற்றிருந்தான்
உண்டற்ற செற்றா ரொழித்து.

எயில்காத்தல்.

470. தாக்கற்குப் பேருந் தகர்போன் மதிலகத்
தூக்க முடையோ ரொதுங்கியும்—கார்க்க
ணிடிபுறப் பட்டாங் கெதிரேற்றார் மாற்றார்
அடிபிறக் கிடு மரிது.

(465-469) தொல், ஷை. (470) ஷை; பெரும்பொருள்வி (புறத்).

அகத்தோன் எயில்காத்த நொச்சி.

471. இருகன்றி னென்றிழந்த வீற்றுப்போற் சீறி
ஒருதன் பதிசுற் றுழியப்—புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல்வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று.

472. பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிடார்
காத்தவிக் காவல ரேனையார்—பார்த்துறூர்
வேண்டார் வணக்கி விறன்மதி ருன்கோடல்
வேண்டுமோம் வேண்டார் மகன்.

அகத்தோன் வாண்மங்கலம்.

473. வருபெரு வேந்தற்கு வான்கொடுத்து மற்றை
யொருபெரு வேந்தற்கீ ரீந்தாள்—[1]ஒருவன்வாள்
இவ்வுலகிற் பெற்ற விகற்கலையேற் றூர்தியாள்
அவ்வுலகிற் போய்ப்பெறுங்கோ லாங்கு.

அகத்தோன் மண்ணுமங்கலம்.

474. வென்றி பெறவந்த வேந்தை யிகன்மதில்வாய்க்
கொன்று குடுமி கொளக்கண்டு—தன்பால்
விருந்தினர் வந்தார்க்கு விண்விருந்து செய்தான்
பெருந்தகையென் றூர்த்தார் பிறர்.

புறத்தான் குடைநாட்கோள்.

475. பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
யிகலரணத் துள்ளவ ரெல்லாம்—அகலிய
விண்டஞ்ச மென்ன விரிந்தகுடை நாட்கொள்ளக்
கண்டஞ்சிச் சும்புளித்தார் கண்.

புறத்தோன் வாணாட்கோள்.

476. தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
அழுது விழாக்கொள்வ ரன்னோ—முழுதளிப்போன்
வாணாட்கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோ ளென்று நினைத்து.

---

(471) தொல். ஷை. (472) யாப். வி. 94; நன். 154 மயிலை. (473, 474) தொல். பொரு. 68. [1]ஒருவன்பால். (475, 476) ஷை; பெரும்பொருள்வி (புறத்).

சோள்ளார்தேங் குறித்தகோற்றம்.

47 . மாற்றுப் புலந்தோறு [1]மண்டில மாக்கள்செல
வேற்றுப் புலவேந்தர் வேல்வேந்தர்க்—கேற்ற
படையொலியிற் பாழொலி பல்கின்று லொன்று
ருடையன தாம்பெற் றுவந்து.

இயங்குபடையரவம்.

478. இலங்குதொடி மருப்பிற் கடாஅம் வார்ந்து
நிலம்புடையூஉ வெழுதரும் வலம்படு குஞ்சரம்
எரியவிர்ந் தன்ன விரியுளை சூட்டிக்
கால்கிளர்ந் தன்ன கடுஞ்செல லிவுளி
கோன்முனைக் கொடியின் விரவா வல்லோன்
நோன்வினை கடக்குந் தோன்றல பெரிதெழுந்
தருவியி னொலிக்கும் வரிபுனை நெடுந்தேர்
கண்வேட் டனவே முரசங் கண்ணுற்றுக்
கதத்தெழு மாதிரங் கல்லென வொலிப்பக்
கறங்கிசை வயிரொடு வலம்புரி யார்ப்ப
நெடுமதி னிரைஞாயிற்
கடிமிளைக் குண்டுகிடங்கின்
மீப்புடை யாரரண் காப்புடைத் தேஎம்
நெஞ்சுபுக லழிந்து நிலைதளர் பொரீஇ
ஒல்லா மன்னர் நடுங்க
நல்ல மன்றவிவன் வீங்கிய செலவே.

479. செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமி னிடிமுரச மார்ப்ப—வரவுறழ்ந்
தாமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

புறத்தோன் மூற்றிய மூதிர்வு.

480. கடல்பரந்து மேருச்சூழ் காலம்போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்—கடலெதிர்
தோன்றுப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றேரான் மூதூர் வரைப்பு.

---

(477) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி (புறத்). [1]போர்மண்டி மாக்க ளங்கொள். (478)தொல்.ஷை. (479)முத்தொள்ளாயிரம்(புறத்). (480)தொல், பொரு. 68. நச்.

தோலின் பெருக்கம்.

481. [1]இருசுட ரியங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோ ளிராமன் [2]கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூ ழரணம் போன்ற
துடல்சின வேந்தன் முற்றிய வூரே.

482. மாமுது தாதை யேவலி னூர்துறந்து
கானுறை வாழ்க்கையிற் கலந்த விராமன்
மாஅ விரலை வேட்டம் போகித்
தலைமகட் பிரிந்த தனிமையன் றனுஅது
சுற்றமுஞ் சேணிடை யதுவே முற்றியது
நஞ்சுகறை படுத்த புன்மிடற் றிறைவன்
உலகுபொதி யுருவமொடு கோதையைத் தலைநாள்
வெண்கோட்டுக் குன்ற மெடுத்த மீளி
வன்றோ ளாண்டகை யூரே யன்றோர்
சொன்முறை மறந்தனம் வாழி
வில்லு முண்டவற் கந்நா ளாங்கே
மாதர்க் கெண்டை வரிப்புறத் தோற்றமும்
நீலக் குவளை நிறமும் பாழ்பட
இலங்கை யகழி முற்று மாக்கிய
கருங்கா னெடுங்கழைக் கண்ணும் விளிம்பழிந்து
பெருநீ ருகுதன் மாதோ
குரங்குதொழி லாண்ட விராமன்
அலங்குதடற் றெள்வாள் (கழித்த?) ஞான்றே.

(சேரமான், பொன்முடியாரையும் அரிசில்கிழாரையும் நோக்கித் தன்படைபட்டதன்மை கூறக்கேட்டோர்த்து அவர் கூறியது)

483. கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்னு மினியே

(481) ஆசிரியமாலை (புறத்); தொல்.பொரு. 67.நச். [1]இருசுடர் வழங்காப்.
[2]கடந்தடு. (482) ஆசிரியமாலை (புறத்). (483) தொல். பொரு. 67. நச்.

யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பக்
களையாக் கழற்காற் கருங்க ணடவர்
உருகெழு வெகுளியர் [1]செறுத்தன ரார்ப்ப
[2]மீளபோ யின்று நாளை நாமே
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமுர சிரங்க வூர்கொள் குவமே.

ஏணிமயக்கம்.

484. சேணுயர் ஞாயிற் றிணிதோளா னேற்றவும்
ஏணி தவிரப்பாய்ந் தேறவும்—பாணியாப்
புள்ளிற் பரந்து புகல்வேட்டார் போர்த்தொழிலோர்
கொள்ளற் கரிய குறும்பு.

485. பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொருவ [3]ருடன்றெழுந்த காலை—யிருவரு
மண்ணொடு சார்த்தி மதில்சார்த் தியவேணி
விண்ணொடு சார்த்தி விடும்.

புறத்தோன் அகமிசைக் கிவர்தல்.

486. வாயிற் கிடங்கொடுக்கி மாற்றினர் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்—ஞாயிற்
கொடுமுடிமேற் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து.

தோல்லேயிற் கிவர்தல்.

487. இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றொரான் போனகங்கைக் கொள்ளானல்—எற்றாங்கொல்
ஆறாத [4]வெம்பசித்தீ யாற வுயிர்பருகி
மாறா மறலி வயிறு.

பாசி.

488. பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதின் றாயிற்—கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யும் விரகென்னும் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோ னின்று.

பாசிமறம்.

489. மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தார்—எறிதொறும்போய்

---

[1]செறுத்தெழுந் தார்பப. [2]எறுபோய். (484) தொல் பொரு. 68 (485) ஷை; பெரும்பொருள்வி (புறத்). [3]ருடன்றெழுந்தாராகில். (486) ஷை. (487) ஷை 67. [4]வெம்பசித் தீயா லுயிர்பருகி. (488, 489) ஷை 68.

நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமான்
ஊர்ச்செரு வுற்றாரைக் கண்டு.

புறத்தோன் மனங்காத்த நொச்சி.

490. தாய்வாங்கு கின்ற மகனைத் தனக்கென்று
பேய்வாங்கி யன்னதோர் பெற்றித்தே—வாய்வாங்கு
வெல்படை வேந்தன் விரும்பாதா ரூர்முற்றிக்
கொல்படை வீட்டுங் குறிப்பு.

நல்லிசைவஞ்சி.

491. பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்
திறைமுறையி னுய்யாதார் தேய—முறைமுறையின்
ஆன்போ யரிவையர்போ யாடவர்போ யாயீன்ற
வீன்போ யுறையு மிடம்.

492. வாகை வனமாலை சூடி யரசுறையும்
ஓகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகை
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பித்தே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

493. இரியன் மகளி ரிலைஞெமலு ளீன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—யரையிரவின்
ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்ற
னாம்பா ராட்டாதார் நாடு.

494. [1]வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளைபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினார் நாடு.

495. கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார் நாடு.

புறத்தோன் வீழ்ந்த புதுமை.

496. வெஞ்சின வேந்த னெயில்கோன் விரும்பியக்கால்
அஞ்சி யொதுங்காதார் யார்யாவர்—மஞ்சுசூழ்

(490) தொல். பொரு; பெரும்பொருள்வி (புறத்) (491—495) முத்தொள்ளாயிரம். [1]வேரறுகுபம்பிச்சுரைபரந்து. (496)தொல்.பொரு. 68; பெரும்பொருள்வி (புறத்).

வான்றோய் புரிசை பொறியு மடங்கின
ஆன்றோ ரடக்கம்போ லாங்கு.

497. மழுவான் மிளைபோய் மதில்ா னகழ்தூர்ந்
தெழுவாளா னேற்றுண்ட தெல்லாம்—இழுமென
மட்டவிழ் கண்ணி மறவேந்தன் சிற்றத்தி
விட்டெரிய விட்ட [1]மிகை.

புறத்தோன் வாண்மங்கலம்.

498. செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொல்—முற்றியோன்
பூவொடு சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு.

மண்ணுமங்கலம்.

499. மழுவாளான் மன்னர் மருங்கறுத்த மால்போற்
பொழிலேழுங் கைக்கொண்ட போழ்தி—னெழின்முடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினன் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து.

புறத்தோன் தொகைநிலை.

500. கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
எதிர்சுருக்கி [2]யேந்தெயில்பா ழாக்கிப்—பதியிற்
பெயர்வான் றொகுத்த படைத்துகளாற் பின்னும்
உயர்வான் குறித்த துலகு.

தும்பை.

தானைநிலை.

501. கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடற்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால்—ஏற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை.

502. அனைத்துலகுஞ் [3]சூழ்போ யருநிதியங் கைக்கொண்
டினைத்தளவைத் தென்றற் கரிதாம்—பனிக்கடன்

---

(497) தொல். பொரு. 67; பெரும்பொருள்வி(புறத்). [1]வகை. (498–500) ஷை 68. [2]யேற்றெயில்பா. (501) தண்டி. 48. (502) ஷை; வீரசோ. அலங். 23 மேற். [3]சேய்போ யரும்பொருள்.

மன்னவனின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு.

503. நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்கு—மாய்படை
பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு.

504. வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ [1]னொளிவழங்குஞ் செம்மற்றே—கையகன்று
போர்தாங்கு மன்னன்முன் புக்குப் புகழ்வெய்யோன்
தார்தாங்கி நின்ற தகை.

505. தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத் [2]துதவினா னாகுமாற் பிற்பிற்
பலர்புகழ் [3]செல்வந் தருமாற் பலர்தொழ
[4]வானக வாழ்க்கையு மீயுமா லன்னதோர்
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு.

யானைமறம்.

506. மாயத்தாற் றாக்கு மலையு மலையும்போற்
காயத்தூ றஞ்சாக் களிற்றொடும்போய்—சாயுந்
தொலைவறியா வாடவருந் தோன்றினார் வான்மேன்
மலையுறையுந் தெய்வம்போல் வந்து.

507. மம்மர் விசும்பின் மதியு மதிப்பகையும்
தம்மிற் றடுமாற்றம் போன்றதே—வெம்முனையிற்
போர்யானை மன்னர் புறங்கவித்த வெண்குடையைக்
கார்யானை யன்றடர்த்த கை.

508. வான்றோய் கழுகினமும் வள்ளுகிர்ப் பேய்க்கணமும்
ஊன்றோய் நரியு முடன்றொக்க—மூன்றும்
கடமா நிலநனைக்குங் கார்யானைக் கிட்ட
படமாறு நீப்பதனைப் பார்த்து.

சேரன்யானை.

509. வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தாற்—றேறாது

(503) தொல். பொரு. 312 உரை. (504) ௸. ௸. 72; பெரும்பொருள்வி (புறத்): [1]ஒளிதிகழுஞ். (505) ௸. [2]துலந்தானு மாகுமால். [3]செம்ம லுடைத்தால். [4]வானுறை. (506) தொல். பொரு. 72 உரை; பெரும்பொருள்வி (புறத்). (507, 508) பெரும்பொருள்வி (புறத்).

செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மே னீட்டுந்தன் கை.

சோழன்யானை.

510. அயிற்கதவம் பாய்ந்துழக்கி [1]யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
[2]பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கிள்ளி களிறு.

511. கச்சி யொருகான் மிதியா வொருகாலாற்
றத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றையு
மீழ மொருகான் மிதியா வருமேயெங்
கோழியர்கோன் கிள்ளி களிறு.

512. பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படா
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—வாற்ற
வலங்கலம் பேய்மகளி ராட வருமே
யிலங்கிலைவேற் கிள்ளி களிறு.

513. கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

514. மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று [3]பனிமதியுந் தன்னுருவந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

515. எங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா—நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.

516. காணியிர்த்தாற் கண்பரிப வல்லியோ புல்லாதார்
மானனையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வார்கழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.

(509, 510) முத்தொள்ளாயிரம். [1]யாழித்தேர் சூத்தி, [2]பாய்செய்த. (511-513) ஷை (புறத்). (514) தொல். பொரு. 307 மேற்; வீரசோ. அலங். 25 மேற்; தண்டி. 55 மேற். [3]பனிமதியம் போல்வதூஉம். (515) வீரசோ. அலங். 31 மேற்; தண்டி. 77 மேற். (516) தண்டி. 23.